★★

பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 பங்குனி 27 ரபி ஆகிர் 19 இதழ்-58
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-4-77

"கூட்டணி - சுதந்திரக்கட்சி கூட்டரசில்

## எஸ். ஜே. வி. பிரதமர்; சிறிமாவோ ஜனதிபதி!"

### சமசமாஜ பத்திரிகை செய்தி

கொழும்பு, வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிட்டு ஆட்சிபீடம் ஏறிய பின்னர் அந்நாட்டின் பிரதம மந்திரியாக தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்நாயகம் பதவி ஏற்பார் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியின் சிங்கள நாளேடான 'ஜனதின' பத்திரிகையே மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரக்கட்சி சார்பில் இப்

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் பிரதேச சுயாட்சி அவசியம்!

## தென்பகுதிமக்கள் இதற்கு ஒத்துழைப்பு தரவேண்டும்

### வி. பொன்னம்பலம் அறைகூவல்

மாவிட்டபுரம், வெள்ளி

"இந்நாட்டில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் தமது தனித்துவத்தைப் பேணி வாழ்வதற்கு அவர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான் ஒரேவழி. ஆகவே தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள், இயக்கங்கள் யாவும் தமது கருத்துவேறுபாடுகளை மறந்து தேசத்தை நேசிக்கும் வகையில் சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் கலந்து பேசுகையில் கூறினர்.

சிங்கள இளைஞர் முன்னணி பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதம் குறித்துக் குறிப்பிட்டுப் பேசுகையில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் தமது மொழி, கலை, கலாச்சாரம் பண்பு போன்றவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டுமானல், அவர்கள் வாழும் வடகிழக்கு பிரதேசங்களில் சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படுதல் அவசியம். உணர்வால் ஒரு முகப்படுத்தப்பட்ட நிலையில் இப்பிரதேச மக்கள் தமது தனித்துவத்தை ஏனைய தமிழ்பேசும் முஸ்லிம்களுடனும் இணைந்து பேணுவதற்கு இந்த அமைப்பே வழிவகுக்கும். 25 ஆண்டுகளுக்கு முன்பு நாம் பெற்ற சுதந்திரத்தின் கூட்டுமொத்த அதிகாரம் ஒரே பீடமாக விளங்கும் பாராளுமன்றத்தில் மட்டும் தங்கியிருப்பது ஜனநாயகம் ஆகாது.

பிரதேச வாரியாக தமிழ்-

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில்

## கொழும்பு மத்தியில் செல்லச்சாமி போட்டி?

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மத்திய தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இ.தொ.கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி போட்டியிடுவார் எனத் தெரியவருகிறது.

இன்று கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் வீட்டில் இது பற்றி கூடி ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர்கள் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம்.சிவசிதம்பரம், இ.தொ.கா. தலைவர் திரு எஸ். தொண்டமான், திரு. எஸ். எம். செல்லச்சாமி தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த திரு. திருநாவுக்கரசு ஆகியோர் அபேட்சகர்கள் தெரிவுபற்றி ஆலோசனை நடத்தினர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுடன் மலைநாட்டிலும் கொழும்பிலும் கணிசமான அளவு வாக்குகள் கிடைக்கக்கூடிய தொகுதிகளில் தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்ச

(8-ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைமுகத்துக்கு அரிசிக்கப்பல் வந்தது

மாவிட்டபுரம், வெள்ளி

நீண்டகால இடைவெளியின் பின் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அரிசிக் கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

காங்கேசன்துறை கடலில் கடந்த சில மாதங்களின் முன் ஏற்பட்ட திடீர் புயல் காற்றினல் காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற வள்ளங்கள் வத்தைகள் ஒன்றுட

(8ம் பக்கம் பார்க்க)

## 12 வர்த்தகர்களுக்கு லட்ச ரூபா அபராதம்!

கொழும்பு, வெள்ளி

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஜவுளிகளை கூடுதல் விலைக்கு விற்றதாக புறக்கோட்டையைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவிற்கு மேல் அபராதம் விதிக்கப்பட்டது.

புறக்கோட்டை பிரதானவீதியிலுள்ள 12 வர்த்தக நிலையத்தில் திடீர் சோதனை நடத்திய போது இவர்கள் சிக்கிக் கொண்டனர்

வர்த்தகர்கள் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து மருதானை, கொள்ளுப்பிட்டி, பொறளை பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் சோதனை இடம்பெற்றது.

## ஈரானில் பூகம்பம்!

### 570 பேர் பலி

தெஹ்ரான், ஏப். 8

ஈரான் நாட்டின் மத்திய பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் சுமார் 570 பேர்பலியாகியிருப்பதாக அஞ்சப்படுகிறது.

கடந்த மாதத்தில் ஈரான் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற பூகம்பத்திலும் பல நூற்றுக்கணக்காேனோர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (ஆ)

## கல்வி பிரதிப் பணிப்பாளர் இன்று யாழ். வருகிறர்

கல்வியங்காடு, வெள்ளி

கல்வி பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு. ஜோர்ஜ் மென்டிஸ் இன்று வடபிராந்திய கல்வித் திணைக்களத்திற்கு விஜயம் செய்கிறர்.

வடமாநிலக் கல்விநிலைபற்றி ஆராயவும், கல்வித்தேவைகள் குறித்து உயர்மட்டக் கல்வி அதிகாரிகளை சந்திக்கும்பொருட்டும், யாழ்ப்பாணம் நல்லூர்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி
தொழிற்பயிற்சிநிலையநிதிக்காக நடாத்தப்படும்

ஈஸ்ரர் நைட்

10-4-77 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு
யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி
விளையாட்டரங்கு மைதானத்தில்
நடைபெறவுள்ளது.

இலங்கை வானெலி கவர்ச்சி அறிவிப்பாளரான
ஜனப் அப்துல் ஹமீட் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க
மக்கள் மனதில் நீங்காக இடம்பெற்ற சுப்பர் ஸ்ரார்
குழுவின் இசை முழங்க

இலங்கை முன்னணி பொப்பிசைக்
கலைஞர்களான

- ஏ. இ. மனேகரன்
- திறீ சிஸ்ரேர்ஸ்
- எம். எஸ். பெர்னண்டோ
- பேபி சந்திரிகா
- மில்ரன் மல்லவராச்சி
- மக்ஸ்வெல் மெண்டிஸ்
- ரொனி ஹசன்
- சுனில் பாரதி
- எஸ். ராமச்சந்திரன்

ஆகியோரின் பாடல்களை ரசிக்க
பிரவேசமோ ரூ.10-00, ரூ.5-00, ரூ.2-00 மட்டுமே

த ரோரு லிமிட்டெட்.

## மூதறிஞர் செல்வாவின் நிலைமையில் மாற்றமில்லை

### அவசியமாயின் டாக்டர் கப்ரால் அழைக்கப்படுவார்

யாழ்ப்பாணம், சனி

மூதறிஞர் செல்வநாயகத்தின் நிலைமையில் எவ்வித மாற்றமுமில்லை. அவரதுஉடல் நிலையில் தொடர்ந்து அபிவிருத்தி காணப்படுகிறது. 17 தினங்களாக தொடர்ந்து மயக்கமுற்ற நிலையில்தான் சிகிச்சைபெற்றுவருகிறர்.

குழாய்மூலம் தோடம்பழச்சாறு, கோழிச்சூப், குளுக்கோஸ் கொடுக்கப்பட்டுவருகின்றது. டாக்டர்கள் நிலைமையை அவதானித்துவருகின்றனர்.

தினமும் மக்கள் ஆஸ்பத்திரிக்குச்சென்று அங்குள்ள பார்வையாளர் பதிவுப்புத்தகத்தில் கையெழுத்திட்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணத் தொகுதி கூட்டணி அமைப்பாளர் சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் நல்லூர் தொகுதி கூட்டணி அமைப்பாளர் சட்டத்தரணி

(8-ம் பக்கம் பார்க்க)

### மாதுளம்பழம் வேண்டும்

மூதறிஞர்செல்வாவுக்கு மாதுளம் பழச்சாறு குழாய் மூலம் உட்செலுத்தப்படுவதால் நல்ல மாதுளம்பழங்களை அவருக்குக் கொடுத்துதவுமாறு கூட்டணி எம். பி: ஒருவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (இ)

1973-ம் ஆண்டின்
44 ம் இலக்க
நீதிநிருவாகச் சட்டத்தின்
283-ம் பிரிவின் கீழ்
மரணச்சொத்து
நிருவாகத் தத்துவப் பத்திரம்
வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் நாயன்மார்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவக்கொழுந்து காசிலிங்கம் மகள் சாரதா என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில் மரணமெய்தியவர் தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் கைம்பெண் நாகம்மா, செட்டியகுறிச்சி, சுழிபுரம்.

விண்ணப்பகாரர்

வலயம்;
இலக்கம்: T/308

எதிராக

1. சிவக்கொழுந்து காசிலிங்கம், நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.
2. பாலசுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளை செட்டியகுறிச்சி, சுழிபுரம்.

எதிர்வாதிகள்

1977-ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதியைக் கொண்ட 281-ம் பிரிவின் கீழான விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய உறுதிக் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்தமையால் மேலதிக பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் வழங்கிய அதிகாரப்படி யாழ்ப்பாண வலயத் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் கட்டளையிடுகிறதாவது:

இக்கட்டளையின் அறிவித்தலைப் பெற்ற எவராவது அல்லது வேறு எவராவது 1977-ம் ஆண்டு மாசி மாதம் 28-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன் தக்க காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி,

மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் பேத்தியார் என்ற வகையில் நிருவாகப் பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவரென்றும், அவ்வண்ணம் அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும், இத்தால் 283 (1) (2)-ம் பிரிவின் கீழ் செயல்பட்டு கட்டளையிடுகிறேன்.

1977-ம் ஆண்டு தை மாதம் 24-ந் திகதி

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.

28-2-77

காரணம் காட்டும் திகதி 9-5-77 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப் பத்திர அதிகாரி.
5894

---

**க. வ. பாலசிங்கம்,**
சட்டத்தரணி,
அச்சுவேலி.

1973-ம் ஆண்டு
44-ம் இலக்க
நீதி நிருவாகச்சட்டம்
283-ம் பிரிவின் கீழ்
மரணச்சொத்து
நிருவாகத் தத்துவப் பத்திரம்
வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் சங்கானை மேற்கு காலஞ்சென்ற பொன்னம்பலம் துரையப்பாவின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

சங்கானை மேற்கு துரையப்பா கைம்பெண் அன்னலட்சுமி

விண்ணப்பகாரி

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 325

எதிர்

1. துரையப்பா சுவேந்திரன்
2. துரையப்பா இராசேஸ்வரன்
3. துரையப்பா மகள் கமலாதேவி
4. துரையப்பா யோகேஸ்வரன்
5. துரையப்பா சற்குணநாதன்
6. துரையப்பா பாஸ்கரன்
7. துரையப்பா மகள் இராஜினிதேவி (4-ம் 5-ம் 6-ம் 7-ம் எதிர்வாதிகள் பராயமற்றவர்கள்)
8. அம்பலவாணர் சின்னத்தம்பி நடராசா சங்கானை மேற்கு.

பராயமற்றவர்களின் தத்துவகாரன்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 25-1-77 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததன் பேரில் 18-5-77 திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க் காரணம் சாட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரி மேற்சொல்லப்பட்டவரின் கைம்பெண் என்ற முறையில் அவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய தத்துவப்பத்திரம் பெறுவதற்கு உரிமை உடையவர் எனவும் அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படும் எனவும் 8-ம் எதிர்வாதி 4-ம் 5-ம் 6-ம் 7-ம் வாதிகளின் தத்துவகாரன் என இந்த நடவடிக்கைக்கு நியமிக்கப்படுவார் எனவும் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை.**
25-1-1977. 5895

---

# "இளையோர் முதியோர் கருத்துக்கள் பரஸ்பரம் மதிக்கப்பட வேண்டும்"

## வீடமைப்பு உ. ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம், சனி

இளைஞர்களது எண்ணங்கள், முதியோரது எண்ணத்திலிருந்து வேறுபட்டிருக்கும். முதியவர்கள் இளைஞர்களுடைய கவனத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். அதே போன்று இளைஞர்களும் முதியவர்களுடைய எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.'' இவ்வாறு வடபகுதி வீடமைப்பு திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எம். இராசரத்தினம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி உயர்தர மாணவர் பேரவையின் 24 ம் ஆண்டு இராப்போசன விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்விருந்திற்கு பேரவையின் தலைவர் செல்வன் ஸ்ரீ கார்த்திகைக்குமாரன் தலைமை தாங்கினார்.

திரு. இராசரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- ''கடின உழைப்பே மாணவர்களுடைய வெற்றிக்கு அத்திபாரமாக அமையும். எத்தகைய திறமை இருந்தாலும் உழைப்பின்றி மாணவர் வெற்றி என்ற இலக்கை அடைய முடியாது. ஆகவே மாணவர்கள் கல்லூரி வழங்குகின்ற முழு வசதிகளையும் பயன்படுத்தி முன்னேறவேண்டும்.''

''கல்லூரி அதிபர் திரு. த. நடராசா பேசும்போது, ''ஒரு கல்லூரி சமுதாயத்தின் சொத்து. ஆகவே கல்லூரியின் வளர்ச்சியில் பெற்றோர்களும், பழைய மாணவர்களும் முக்கியமாக அக்கறை காட்டிவருதல்வேண்டும். கல்லூரியின் வளர்ச்சிக்கு இவ்விருசாராரும் தக்க நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வரவேண்டும். ஒரு கல்லூரியின் பெருமை அக்கல்லூரியின் பழைய மாணவர் வரிசையில் தங்கியுள்ளது எனவும் கூறலாம்'' என்றார்.

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். மகாதேவா பேசும்போது, ''கல்லூரியைவிட்டு வெளியேறும் மாணவர்கள் பெற்றோரது நம்பிக்கைக்கு ஏற்ற முறையில் நடக்கவேண்டும். கல்வியை முடித்து கல்லூரியை விட்டு வெளியேறும்போது பெற்றோருக்கு அடுத்தபடியாக சமுதாயத்துக்கு ஏற்றவகையில் உயர்ந்த நிலையை அடையவேண்டும். அப்போது பெற்றோர் மட்டுமல்ல, கல்லூரியும் கற்பித்த ஆசிரியர்களும் பெருமை கொள்வர்'' என்றார்.

பேரவைப் பொறுப்பாசிரியரும் பதிலதிபருமான திரு. கை. தா. தம்பிரத்தினம் பேசும்போது, மாணவர்கள் சமுதாய பிரச்சினைகளை எதிர்த்து முன்னேறி உயர்ந்த நிலையையடையவேண்டும். மாணவர்கள்தான் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள் என குறிப்பிட்டார்.

மாணவர்கள் சார்பில் பேரவைத் தலைவர் செல்வன் ஸ்ரீ. கார்த்திகைக்குமாரன், செல்வன் சி. இரவிந்திரன், செல்வன் க. சிவஞானம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசினார்.

பேரவைச் செயலாளர் செல்வன் பூ. நவரட்ணராஜா நன்றியுரை நிகழ்த்தினார்.

(உ)

---

# அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்குச் சேரவேண்டிய சோலைவரி நிலுவைகளை வசூலிக்க நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடையாள அட்டைகளுடன் நிலுவைகள் வசூலிக்க வரும் இவர்களிடம் வரியிறுப்பாளர்கள் கொடுக்கும் சகல கொடுப்பனவுகளுக்கும் தவறாது உடனே பற்றுச்சீட்டின் மூன்றாவது பிரதியைத் தற்காலிக பற்றுச்சீட்டாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்குள் இப்பிரதியின் மூலப்பிரதி கிடைக்காவிடின் இக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். மேற்குறிப்பிட்ட பிரகாரம் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளாமல் செய்யும் எதுவித கொடுப்பனவுகளுக்கும் இம்மன்றம் பொறுப்பில்லை என்பதை அறியத் தருகிறேன். நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நிலுவைகளை முழுதாகப் பெற மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர். பகுதிக் கொடுப்பனவுகளை ஏற்க அவர்களுக்கு அதிகாரமில்லையாதலால், அப்படியான கொடுப்பனவுகள் என்னுடைய உத்தரவு பெற்றபின் இவ்வலுவலகத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.

**க. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1-4-77. 5841

---

## சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வ. உ.)

**1. வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்:**

1. 10,000 வரை தரப்படுத்தப்பட்ட வெற்றுச் சாக்குகள்.
2. நைலோன் நூல் சுற்றிவந்த பிளாஸ்ரிக் குழாய்கள் 10,000 தரப்படுத்தப்பெற்றது.
3. சணல்நூல், சணல் கயிறு.
4. மேற்காட்டிய பொருட்களைக் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பிப்போர் பதிவுத்தபாலில் 16-4-77 க்கு முன்பு பிரதம முகாமையனுக்கு அனுப்பவும். உறையின் இடதுபக்க மேல்மூலையில் எப்பொருளுக்கு என்பதைக் குறிப்பிடவும்.

**ஏலவிற்பனை**

2. கீழ்க்காணும் பொருட்கள் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் 16-4-77 சனி பி. ப. 2-00 மணிக்கு பகிரங்கஏலத்தில் விற்கப்பெறும்.

1. பெற்றோமக்ஸ் லையிட்டுகள் 15.
2. கிறிக்கெற் விளையாட்டு உபகரணங்கள்.
3. சமையல் அறைத் தளபாடங்கள்.
4. கட்டில்கள்.
5. வெற்றுப்பலகைப் பெட்டிகள்.
6. காட்போட் பெட்டிகள்.
7. வர்த்தமானிப் புத்தகங்கள்.

**பொது முகாமையர்.**
5891

---

## பண்டிதையின் சொற்பொழிவு நூல்வடிவில்

சுழிபுரம், வெள்ளி

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மாவின் அப்பாக்குட்டியின் அபிராமியந்தாதி சொற்பொழிவுகள் நூல்வடிவில் வெளியிடப்படவுள்ளன.

சென்ற நான்கு முறை செய்யுள்வடிவில் அபிராமியந்தாதியை வெளியிட்ட வழக்கம்பரை சனசமூகநிலையத்தினரே இந்நூலையும் வெளியிடவுள்ளனர்.

---

## முதலிடம் வடமராட்சி இந்துமகளிர்க்கு

பருத்தித்துறை, வெள்ளி

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை 19 வயதுக்குட்பட்ட பாடசாலைமாணவிகள்போட்டியில் முதலாவது இடத்தை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் பெற்றுள்ளனர்.

கொழும்பு றோயல் கல்லூரி விளையாட்டரங்கில் நடந்த இறுதிச் சுற்றுப் போட்டியில் மேற்படி மகளிர் கல்லூரியினர் பம்பலப்பிட்டி புனித குடும்ப மாணவிகளைத் தோற்கடித்ததன் மூலமே முதலிடத்தைப் பெற்றனர்.

வடஇந்துமகளிர் கல்லூரிக் கோஷ்டியின் சிறந்த வீராங்கனையாக செல்வி மலர்இராணி சின்னையா பாராட்டுப் பெற்றார். (உ)

---


# விளம்பரம்

## விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாட்டில் இருப்பதால் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குஉண்டு. விற்பனை நிகழும் நாட்கள்-சித்திரை மீ 9ம், 10ம், 11ம் திகதிகளில். விலாசம்; 18, பெருமாள் கோவில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5874

## தேவை

தோட்டச் செய்கைக்குரிய நன்நிலமான காணி ஒரு ஏக்கர் வரை-ராஜ வீதியில் குறைந்தது மூன்றுவருட காலத்துக்கு குத்தகைக்குத்தேவை. சகல விபரங்களுடனும் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 5865, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம் 5865

எலுமிச்சம்பழக் கோதுகள் எமக்குத்தேவை. நீங்கள் உபயோகித்த எலுமிச்சம்பழக் கோதுகளை வெய்யிலில் நன்கு உலர்த்திக்காயவிட்டு எமக்குத் தொகையாக சேகரித்துத் தந்தால் நாம் விலை கொடுத்து வாங்குவோம். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 5877

சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படும் சைவப் பிரகாச அச்சியந்திரசாலைக்கு மனேஜர் தேவை. அச்சக நிர்வாகத்தில் அனுபவமுடையவர்கள் மாத்திரம் 20-4-77க்கு முன் செயலாளர், சைவபரிபாலனசபை, 4...0, கேசன்துறைவீதி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 5861

## பயிற்சி

வெல்டிங் (மூன்று மாதம்) இலெக்றிக் வயறிங் (மூன்று மாதம்) ரேடியோ Transistor Tecno'ogy (ஆறுமாதம்) இவற்றை நவீனமுறையில் பயின்று வெளிநாடு செல்லுங்கள். இலங்கையின் பலபகுதிகளில் இருந்து மாணவர்கள் இங்கே பயிலுகிறார்கள். Theory & Practicals ஒரே இடத்தில் நடைபெறுகின்றன. அடுத்தவகுப்புகள் ஏப்ரல் 18 ஆரம்பம். National Institute of Engineering Technology மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5871

## வகுப்புக்கள்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் 1977-ம் ஆண்டுக்கான தேசிய உயர்கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. சமூக விஞ்ஞானம் பாடநெறி, மனிதவியல் பாடநெறி ஆகிய வகுப்புகளுக்கு மட்டுமே சில இடங்கள் காலியாக உள்ளன. மே மாதம் இவ் வகுப்புகள் ஆரம்பமாகும். சேர விரும்புவோர் உடனடியாக தொடர்புகொள்ளவும். அதிபர், இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு. 5887

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


---

## பறவைக்காவடி எடுப்பார்

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமம் தவசிகுளம் அம்பாள் ஆலயத்தில் நந்தமட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திற்கு நாளை மறுதினம் திரு. ச. இரத்தினம் என்பவர் பறவைக்காவடி எடுத்து செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (உ)

# மத்திய அமைச்சர்களுடன் கருணாநிதி தொடர்ந்துபேச்சு

## எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்தார்

புதுடில்லி, ஏப். 8.
தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று உள்துறை அமைச்சர் திரு, சாண்சிங்கையும், சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயணையும் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார். இவர்களது சந்திப்பு வெகு நேரம் நீடித்தது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு வை. பி. சவானையும் திரு. கருணாநிதி சந்தித்துப்பேசினார்.

நேற்றுமுன் தினம் பிரதமர் மொரார்ஜிதேசாய், லோக சபைத்தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி, பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம், அணுசக்தி அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன், ஜனதாக் கட்சித் தலைவர் அசோக் மேத்தா ஆகியோரையும் திரு. கருணாநிதி சந்தித்தார்.

தமிழ்நாட்டில் தற்போது உள்ள அரசியல் நிலைகுறித்து திரு. கருணாநிதி அமைச்சர்களுடன் பேசியதாகத் தெரிகிறது. (ஆ)

## பழிவாங்கும் எண்ணம் ஜனதா அரசுக்கு இல்லை

### பிரதமர் மொரார்ஜி கூறுகிறார்

புதுடில்லி, ஏப்ரல் 8
திருமதி இந்திராகாந்தியின் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை நான் அகற்றமாட்டேன். ஆனால் குவிந்துபோயுள்ள இடிபாடுகளை அகற்றவேண்டிய கடமை எம்மைச்சார்ந்தது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்நேற்று ராஜ்ய சபையில் பேசுகையில் கூறினார்.

பதில் ஜனாதிபதி திரு. ஜட்டியின் உரை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து திரு. மொரார்ஜி பேசினார்.

தேர்தலின்போது மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை கௌரவித்து நாம் அவற்றை நிறைவேற்றுவோம் என்றும் கூறிய பிரதமர் பழிவாங்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் ஜனதா அரசு மேற்கொள்ள மாட்டாது என்றும் கூறினார்.

இவரது பதிலுக்குப்பின் ஜனாதிபதியின் உரையை ராஜ்ய சபை ஏற்றுக்கொண்டது. (இ)

## வங்கிகள் மூலம் ஆசிரியர்களுக்கு சம்பளம்

கொழும்பு, வெள்ளி
ஆசிரியர்களுக்கான சம்பளப்பணத்தை வங்கியூடாக வழங்க கல்விஅமைச்சுஇணங்கி உள்ளது.

ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கை இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் முதல் இத்திட்டம் அமுலுக்கு வரும் என் கல்விஅமைச்சின் செயலாளர் டாக்டர் பிரேமதாச உடகம நேற்று தம்மைச் சந்தித்த ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

நடனம், இசை, கலை ஆகிய பாடங்களில் டிப்ளோமா பட்டம்பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டதாரி சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### சர்வதேச ரீதியில் ஆசிரியர் பரிமாற்றம்

சர்வதேச ரீதியில் ஆசிரியர்கள் பரிமாற்றம் செய்யப்படுவர்என்றும் இந்தியா, சுவீடன் பிரிட்டன், மாலைதீவு ஆகிய நாடுகளுடன் இப்பரிமாற்றம் நிகழும் என்றும் டாக்டர் உடகம தெரிவித்தார். (இ)

டைனமைட் வழக்கு:

## அக்காவுக்கு அபராதம்; தங்கை விடுதலை

யாழ்ப்பாணம், சனி
சட்டவிரோதமாக டைனமைட் வெடிமருந்துகள் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி இருசகோதரிகளுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் முதலாவதுஎதிரியான யோகராஜா மகேஸ்வரி என்ற மூத்த சகோதரி குற்றத்தை ஒப்புக்கொண்டதனையடுத்து 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கை குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜி. ஹேவா யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

முதலாம் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் இரண்டாம் எதிரியான ரூபியை விடுதலை செய்தார். (உ)

## ஜெயபிரகாஷுக்கு சிறு[illegible]ரகத்தில் பாதிப்பு எப்படி

புதுடில்லி, ஏப் 8
சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு சிறுநீரகத்தில் எவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது என்பதை ஆராயும் பொருட்டு கமிஷன் ஒன்றை நியமிக்க மத்தியஅரசு எடுத்துள்ள தீர்மானத்தை சண்டிகார் வைத்திய மேற்பட்டப்படிப்பு பிரிவு டைரக்டர் பாராட்டியுள்ளார். (ஆ)

## "சமாச்சார்" கலைக்கப்படும்?

புதுடில்லி, ஏப். 7
இந்திய செய்திஸ்தாபனமான சமாச்சாரைக் கலைப்பது பற்றி ஆராய கமிஷன் ஒன்று நியமிக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. எஸ். கே. அட்வாணி இன்று லோகசபையில் தெரிவித்தார்.

சமாச்சாரைத் திடீரெனக் கலைத்துவிட்டு 4 செய்தி ஏஜன்சிகளை முன்னர்போல் இயங்க அனுமதிப்பதில் பல சிக்கல்கள் உண்டு என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## தமிழ்நாட்டு சிறைகளில் 14நக்ஸலைட்மட்டும்உள்ளனர்

சென்னை, ஏப்ரல் 8
தமிழ்நாட்டில் 14 நக்ஸலைட்டுகள் தவிர சகல அரசியல் கைதிகளும் விடுதலைசெய்யப்பட்டுவிட்டனர் என்று தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. கார்த்திகேசன் தெரிவித்தார்.

14 நக்ஸலைட்டுகளின் எதிர்காலம் பற்றி குற்றச்சாட்டுகள் ரீதியில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்நியச் செலாவணி மோசடி தொடர்பாக கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள 23 பேர் இன்னும் தலைமறைவாகியுள்ளனர். என்றும்அவர்கள்மீதான வாரண்ட் இன்னும் அமுலில் உள்ளன என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## தமிழ்நாடு கவர்னராக சென்னை தலைமை நீதிபதி

### கோவிந்தநாயர் நியமனம்

சென்னை, ஏப். 8
தமிழ்நாட்டின் தற்காலிக கவர்னராக சென்னை உயர்நீதிமன்ற தலைமைநீதிபதி திரு. பி. வி. கோவிந்தநாயன் நியமிக்கப்படவுள்ளார்.

திரு. கோவிந்தநாயன் நாளை மறுதினம் தமது பதவியை ஏற்றுக்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திரா ஆட்சியின்போது நியமிக்கப்பட்டிருந்த கவர்னர் சுக்காடியா நாளை தமது பதவியை விட்டுச்செல்வார் என்றும் நாளை மறுதினம் புதியவர் தற்காலிகமாகப் பதவியைப் பொறுப்பேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியான திரு. பி. வி. கோவிந்தநாயன் சென்னையில் உள்ள நீதிபதிகளில் மூத்த நீதிபதியாவார். (ஆ)

# ஜெயப்பிரகாஷிடம் சரணடைய விருப்பம்

## கடத்தல்கரரர்பற்றி பிரதமருடன் பேசி தீர்மானிக்க முடிவு

புதுடில்லி, ஏப்ரல் 8
கடத்தல்காரர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணிடம் நிபந்தனையற்ற முறையில் சரணடைய முன்வந்துள்ளனர். முன்னைய அரசினால் நீண்டகாலமாகத் தேடப்பட்டுவந்த பல பிரபல கடத்தல்காரர்கள் சரணடைய முன்வந்திருப்பதுடன் இவர்கள் தமது தொழிலைக் கைவிட்டுவிட்டு புதியவாழ்வு அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமது பங்கைப் பூரணமாக வழங்க கடத்தல்காரர்கள் முன்முந்துள்ளதை ஜெயப்பிரகாஷ் பாராட்டியுள்ளார்.

கடத்தல்காரர் வெளியிட்டுள்ள இக்கருத்து சம்பந்தமாக பிரதமர் மொரார்ஜி தேசாயுடனும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனும் ஜெயப்பிரகாஷ் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அடுத்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு தீர்க்கமான முடிவை ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற்கொள்வார் என்று அவருடன் நெருங்கிய தொடர்புடைய கோவிந்தராஷ் தெரிவித்தார்.

சரணடையும் கடத்தல்காரருக்கு நிபந்தனையற்ற விடுதலை வழங்கும்போது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஜெயப்பிரகாஷ் ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது. (ஆ)

## நேரமாற்றத்தால் அவதியுறும் நோயாளர்

சுழிபுரம், வெள்ளி
சுழிபுரம் கிராமசபை ஆயுள்வேத வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட சென்ற இருபத்தைந்து வருடகாலமாக காலை ஏழரை மணி முதல் திறந்து நோயாளர்களுக்கு மருந்துவகைகள் கொடுக்கப்பட்டுவந்தன. இம்மாதம் முதல் பகல் ஒன்பது மணிக்குத் திறந்து வைத்தியசாலையை நடாத்துமாறு கிராமசபை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதனால் நோயாளர்கள் வீதியில் நின்று வைத்தியசாலை திறக்கும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இத்திடீர் மாற்றத்தால் நோயாளர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வைத்தியசாலையைவழமைபோல் திறந்து நடாத்த பணிக்குமாறு பொதுமக்கள் மகஜர்மூலம் கோரியுள்ளனர். (உ)

## 4-வது டெஸ்டில் பாக். வெற்றி

ரினிட்டாட், ஏப். 8
ரினிட்டாட்டில்நடைபெற்ற மேற்கிந்திய - பாகிஸ்தான் 4-வது கிரிக்கட் டெஸ்டில் பாகிஸ்தான் 276 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் காப்டன் முஷ்ராக்முகமட் முதல் டெஸ்டில் 122 ஓட்டங்களைப் பெற்றதுடன் 5 விக்கட்டுகளைக் கைப்பற்றியதும் இரண்டாவது டெஸ்டில் 56 ஓட்டங்களைப் பெற்றதுடன் 3 விக்கட்டுகளைக் கைப்பற்றியதும் இந்த டெஸ்டின் சிறப்பு அம்சமாகும். சிறந்த வீரருக்கான பரிசு அவருக்கே கிடைத்தது.

ஸ்கோர் விபரம்;பாக். 341, 301, மேற்கிந்தியா 154,222.

2-வது டெஸ்டில் மேற்கிந்தியா வெற்றிபெற்றதும் மற்றைய இரண்டும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதும் தெரிந்ததே. 5-வது இறுதி டெஸ்ட் இம்மாதம் 15-ம் திகதி ஜமேய்க்காவில் நடைபெறும். தேவை ஏற்படின் 6 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

......

## பருளாய் வீதிக்கு மின்சாரம்

சுழிபுரம்,வெள்ளி
சுழிபுரம்-பருளாய் வீதிக்கு மின்வெளிச்சம் இணைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுமார் பதினையாயிரம் ரூபாய் செலவில் பதினைந்திற்கு மேற்பட்ட மேர்க்கூறி விளக்குகளை சுழிபுரம் பருளைச் சந்தியிலிருந்து.பருளை முருகன் கோயில்வரை ஏற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

# லோகசபை சட்டசபை - ஆயுள்குறைப்பை காங்கிரஸ் எதிர்க்கும்

## சவான் அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 8
இந்திய லோகசபையினதும் சட்டசபைகளினதும் பதவிக் காலத்தை ஐந்துவருடங்களாக குறைக்கும் அரசியல் சாஸன திருத்த சட்ட மூலத்தை காங்கிரஸ்கட்சி எதிர்க்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் நேற்று லோக சபையில் தெரிவித்தார்.

சட்டத்துறை அமைச்சர் திரு. சாந்திபூஷன் நேற்று இச் சட்ட மூலத்தை லோகசபையில் சமர்ப்பித்தார்.

இந்த அரசியல் சாஸனத் திருத்தம் மாநில அரசுகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டது ஆகவேதான் இச்சட்ட மூலத்தை எதிர்க்கட்சி எதிர்க்கும் என்றும் திரு. சவான் கூறினார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி இம்மசோதாவை ஆதரிக்கும் என்றும் திரு. எம். கல்யாணசுந்தரம் தெரிவித்தார்.

அரசியல் சாஸன திருத்தத்தைஆதரிக்கும் அதேவேளையில். இதுகுறித்து அரசின் அவசரத் தன்மையைத் தான் பாராட்டமுடியவில்லை என்றும் திரு. கல்யாணசுந்தரம் தெரிவித்தார். (இ)

### மணிவாக்கு

பெண்ணுரிமை என்ற விஷயத்தில் நான் பிடிவாதமாகவே இருக்கிறேன். புதல்விகளையும் புதல்வர்களையும் நான் சம அந்தஸ்தோடுதான் நடத்துவேன்.

—காந்தியடிகள்

ஈழநாடு
THE EELANADU

## முதற்படி

யாழ்ப்பாணத்திலே கள்ளு 'சீஸன்' ஆரம்பமாகிவிட்டதால் மதுபானம் அதிகரித்து குற்றங்களும் பெருகி வருவதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுபற்றி அரசாங்கமும், சிறப்பாகத் தமிழ்த் தலைவர்களும் உடன் தக்கநடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றேல் பொதுமக்கள் அதிக தொந்தரவுக்குள்ளாக நேரிடும்.

சுன்னாகம் பொலிஸ்பகுதியில் மட்டும் சென்ற மூன்று நாட்களில் மதுபோதையில் வீதிகளிலே கலவரங்கள் செய்து பொதுமக்களுக்கு இடையூறுசெய்ததாகப் பதினைந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும், பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குற்றங்கள் அதிகரிப்பதற்கு மதுபானமே மூலகாரணம் என்றும், கள்ளின் விலை குறையக்குறைய குற்றச்செயல்கள் கூடுகின்றனஎன்றும் பொலிஸ் வட்டாரங்களிலே தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் புகார்களிலே புதிதொன்றுமில்லை. அன்னிய ஆட்சிவர்க்கம் நம்மை அடிமையில் வைத்திருக்க மதுபானத்தை ஒரு கருவியாகக் கையாண்டது. சீனமக்களின் மனதைச் சீர்குலைக்க அபினைப் பயன்படுத்தியது.

புதுசீனம் விடுதலை அடைந்த பின் அபின் அரக்கன் ஒழிக்கப்பட்டான். இலங்கை விடுதலை பெற்றதும், மக்கள் விமோசனமின்றித் தவிக்கிறார்கள். மதுபானத்தை ஒழிக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்குப்பதில் புதுவருடத்துக்காக மதுபான விற்பனையை அதிகரிக்க சில நடவடிக்கைகளையும் எடுத்ததாம். இது மிகவும் வருந்தத்தக்கது.

மதுபானத்தால் குற்றங்கள் அதிகரிப்பதாகப் பொலிஸ் அதிகாரிகளேகூறுகையில், இந்த மூலகாரணத்தை நீக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? மதுபானத்தை ஒருபுறம் அதிகரிக்கச்செய்து மற்றோர்பக்கம் பொலிஸையும் வைத்துத் தண்டிக்கச் செய்வது மக்களுக்குநன்மையைச் செய்வதாகாது. குற்றங்களைக் குறைக்க இது நேர்மையான வழியுமல்ல.

போதைப் பொருள்களை பௌத்தம், சைவம், இஸ்லாம் முதலிய எல்லாச் சமயங்களும் பஞ்சமாபாதகங்களென்று கண்டித்திருக்கையில், அதன் விற்பனையைத் தடுக்க அரசாங்கமும் பல அரசியல் தலைவர்களும் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதேன்?

பொதுத்தேர்தல்கள் நெருங்குகின்றன. எந்தக் கட்சியும் மதுவிலக்கைப் பற்றி ஒரு வார்த்தையும் கூற முன்வரவில்லை. பொதுமக்கள், பல கட்சித்தலைவர்களையும் வேட்பாளர்களையும் இவ்விஷயமாக அவர்கள் கொள்கை என்ன என்று கேட்டு, மது அரக்கனை ஒழிப்பதில் அதிக எச்சரிக்கையாக இருக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. மக்கள் ஊக்கம் காட்டினாலே அரசியல்கட்சிகளும் எதுவும் செய்ய முன்வரும்.

சிற்சில பொருள்களின் விலைகளைக் குறைப்பதால் குடும்பத்தலைவிகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை விட, மதுபானம் அதிகரிப்பதால் விளையக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் அதிகமாகுமென்பதை விளக்கத்தேவையில்லை. இவ்விஷயத்தில் தாய்மார்களே முன்வந்து அதிக முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

அண்டையிலுள்ள பாரதநாட்டிலே, எல்லா ராஜ்யங்களிலும் பூரண மதுவிலக்கைக்கொண்டுவர புதிய அரசாங்கம் முயற்சிகள் செய்வதாகத் செய்திகள் கூறுகின்றன. லங்கையிலே பௌத்த தர்மத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுமென்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால் அந்த தர்மத்தில் மிகமுக்கியமானதாக மதுபான ஒழிப்பை, ஏன் அரசாங்கம் கடைப்பிடிக்க முன்வரவில்லை? இதற்கு மாறாக மதுஉற்பத்தியைப் பெருக்கச் செய்வது, மேற்குறித்த அரசியல் சட்ட அடிப்படை நோக்கத்துக்கு நேர்முரணானதாகாதா?

இவ்விஷயத்தில் தமிழ்த் தலைவர்களுக்கு மிக முக்கியமான பொறுப்புண்டு. மதுபானம் தனிப்பட்டவர்களின் சொந்த விஷயமென்று அவர் சிலையாக இராமல், பல குடும்பங்கள் குடியினால் குட்டிச் சுவராவதை உணர்ந்து, பிரசாரமூலமாக வேறு வகைகளிலும். மது அரக்கனை தமிழ்ப்பகுதிகளில் அறவே நீக்கவேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்படிச் செய்வது, ஈழத்தமிழரின்வாழ்வு தலைதூக்கி முன்னேறுவதற்கு முதற்படிகளில் ஒன்றாகும்.

## இவருக்கு 250 ரூபா இழப்பு

யாழ்ப்பாணம், சனி

விலைப்பட்டியலை கடை முன்பாக வைக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடரப் பட்ட வழக்கில் எதிரிக்கு 250 ரூபா அரச செலவாக செலுத்துமாறு யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினத்தால் உத்தரவிடப்பட்டது.

யாழ். விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. நா. சண்முகலிங்கம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பையா தம்பிமுத்து என்பவருக்கு எதிராக இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார். (உ)

## புதிய சமாதான நீதவான்

சாவகச்சேரி, வெள்ளி

கைதடி கிராமசபை உபதலைவர் திரு இ. சிதம்பரம் சமாதனநீதவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார். இவர் 1968ம் ஆண்டுமுதல் உபதலைவராகவும் நிர்வாகப்பொறுப்பாளராவும் கடமையாற்றிவருகின்றார் இவர்சிறந்த சமூகதொண்டனுமாவார். (உ)

# திருமுறைகளில் ஈழத்துத் தலங்கள்

க. கணபதிப்பிள்ளை

இதுவரைகிடைத்த தேவாரத் திருமுறைகளுள் சம்பந்தப்பிள்ளையார் பாடிய தலப்பதிகங்கள் 219 ஆகும். அப்பரடிகள் பாடியவை 125 ஆகும். சுந்தரர் 84 தலங்களைப் பாடியுள்ளார். இவையன்றிமேலும் பல நூறுதலங்களை அவர்கள் வணங்கிப் பாடியுள்ளனர். இதற்கு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய க்ஷேத்திரக்கோவை, ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை, க்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகம், அடைவுதிருத்தாண்டகம் என்பனவும், பிறதலத்துப் பதிகங்களும் சான்றாகின்றன. பதிகம் பெறாத தலங்கள் வைப்புத் தலங்களாகக் காட்சிதருகின்றன மூவர் திருமுறைகளில்.

இத்தலங்களுள் மூவர் முதலிகள் சென்று வழிபடாத இமயத்தலங்களும் ஈழநாட்டுத் தலங்களும் பலவுண்டு. வடக்கில் திருக்கயிலை, ஸ்ரீபருப்பதம், இந்திரநீலப்பருப்பதம், சமுகைங்காவதம், கேதாரம், நொடித்தான்மலை என்பனவும், ஈழத்தில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், கதிர்காமம் என்பனவும் இடம்பெறுகின்றன. ஈழநாட்டுத் திருப்பதிகளுள் திருக்கேதீச்சரத்துக்கு மட்டும் சம்பந்தப்பிள்ளையாரும் சுந்தரரும் அருளிய பதிக வடிவங்கள்உண்டு. ஆனால் கோணமலைக்குக் காழிவேந்தர் பதிகம் மட்டும் உண்டு. அதிலும் ஏழாம்பாடல் மறைந்துவிட்டமை வருந்துவதற்குரியது. இந்த நிலையில், கேதீச்சரத்துக்கு அப்பரும், கோணமலைக்கு அப்பரோடு சுந்தரரும் முகிழ்த்த திருமுறைப் பதிகங்கள் இதுநாள்வரை நமக்குக் கிடைக்காமை நமது தவக்குறையேயாகும். இருந்தும் அப்பரும் சுந்தரரும் வழங்கிய க்ஷேத்திரக்கோவைத் தாண்டகம், ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகைப்பதிகங்களில் இவ்விருதலங்கள் பற்றிய குறிப்புகளோடு கதிர்காமம்பற்றிய சுவடுகளும்தோற்றமளிப்பது பேருவகை பயப்பதாகும். அவை பற்றிய குறிப்புக்களைக் காண்பாம்.

### திருக்கோணேசுவரம்

ஏனைய இருவரினும் அப்பர் சுவாமிகள், பதிகப்பொருளை அமைப்பதில் ஒருசிறிது வேறுபட்டவர் எனலாம். சம்பந்தரும் சுந்தரரும் எத்தலத்தை வாழ்த்தினாலும் அத்தலத்தையும் அத்தலத்திறைவரையுமே விதந்துபாடும் பெருவழக்குடையவர்கள். ஆனால் அப்பர்சுவாமிகளோ தாம்பாடும் பதிகம் ஒன்றில் பிறதலத்திறைவர்களையும் நினைந்து அத்தலங்களையும் ஆங்காங்கே வைத்துப் பாடும் வழக்குடையவர் என்பதை அவர் பாடிய பலபதிகங்கள்வலியுறுத்துகின்றன. அவற்றுள் ஒன்று திருநெய்த்தானப் பதிகம். அதில்,

'தக்கார் அடியார்க்கு
நீயே என்றும்
தலையார் கயிலாயன்
நீயே என்றும்
அக்காரம் பூண்டாயும் நீயே
என்றும்
ஆக் கூரில் தான் தோன்றி
நீயே என்றும்
புக்காய ஏழுலகும் நீயே
என்றும்
புள்ளிருக்கு வேளூராய்
நீயே என்றும்
தெக்காரமா கோணத்தானே
என்றும்
நின்ற நெய்த்தானா என்
நெஞ்சுளாயே''

என வருவது ஆறாம் பாடல். இங்கு பல தலங்களுள் ஒன்றாகப் பொலிகின்றது தெக்காரமாகோணப் பதி. தெக்கு, ஆர், அ, மா, கோணம் என்பது இதன் பிரிநிலையாகும். தெக்கு-தெற்கு, இஃது எதுகை நோக்கிச் சிதைந்தது. அன்றி தெக்கணம் என்பதன் சிதைவாகக் கொள்ளினும் அமையும். தெக்கணம் என்னும் வட சொல்லுக்குத் தமிழ் வடிவம் தெற்கு ஆகும். அ. மா. கோணம் என்பது அந்த மாகோணம் என்றோ அழகிய மாகோணம் என்றோ பொருந்தும். இங்கு வரும் அகரத்தை சாரியை ஆகக் கொள்ளினும் அமையும். எனவே தெற்குத் திசையின் கண் பொருந்திய அந்த மா கோணம் என்பது இத்தொடர் தரும் பொருள். இங்கு இடம்பெறும் கோணம், கோணமலையாகும். இப்பதிகப் பாடல்கள் பத்தினும் வடகயிலையை நினைத்துப் பாடிய அப்பர் சுவாமிகள் ஒரு முறையாவது தென்கயிலையாகிய கோணமலையை நினைத்துப் பாடியது வியப்புக்குரியதன்று இப்பதிகத்திலே ஏனைய தென்கயிலைகளாகிய சிராப்பள்ளியும் காளத்தியும் இடம்பெறுவதால் கோணமாகிய தென்கயிலையும் இடம்பெறுவது பொருத்தமாகும். மேலும் இப்பதிகத்திலேயே நான்காம் பாடலில் ''ஏகம்பத் தென்னீசன் நீயே என்றும் தென்னூர்ப் பதியுளாய் நீயே என்றும் நிறை நெய்த்தானாவென் நெஞ்சுளாயே'' என்னும் பாடற்பகுதி காணப்படுகிறது. இதில் வரும் ''தென்னூர்ப்பதி'' கோணமலைபோலும். இந்த நிலையில் ஒரு பதிகத்தில் ஒரு தலத்தை இருமுறை குறிப்பிடுவது பொருந்துமா? என்பது சிந்தனைக்குரியது. ஆனால் ஒரே பதிகத்தில் ஒரு தலத்தையே இருமுறை சிந்திக்கும் வழக்கம் உடையவர் அப்பார் சுவாமி என்பதை அவர் பாடிய பல பதிகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இனி, இங்கு குறிப்பிடும் 'மாகோணம்' என்பது கும்பகோணமாதலும் கூடுமோ? என நமக்கு ஐயந் தோன்றக் கூடும். ஆனால் அது பொருந்துவதன்று. அப்பரும் சுந்தரரும் கி. பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தனரென்பர் வரலாற்று ஆசிரியர்கள் அவ்விருவரும் அக்காலத்தில் கும்பகோணத்துக்கு குடந்தை, குடமூக்கு என்னும் பெயர்களாலேயே பதிகம் வழங்கியுள்ளனர். சம்பந்தர் பல தலங்களையும் சிந்தித்துப் பாடிய பதிகம் ஒன்றேயாகும். அது க்ஷேத்திரக் கோவைப் பதிகம். அதில் முதற் பாடலில் 'குடந்தை' பாடுகின்றார். இரண்டாம் பாடலில் ''கயிலை, கோணம்'' என இரண்டாம் முறையும் கயிலையோடு கோணத்தையும் சிந்திக்கின்றார் காழிப் பிள்ளையார். எனவே ஒரு பதிகத்திலேயே சம்பந்தப்பிள்ளையாரால் 'குடந்தை' என்றும் 'கோணம்' என்றும் கூறப்படுவதால் குடந்தை வேறு; கோணம் வேறு என்பது முடிபாகும்.

அப்பர் அருளிய அடைவு திருத்தாண்டகம் திரு அதிகை பாடுவது. அதில் அதிகையோடு வேறு பல தலங்களையும் வழுத்துகின்றார் அப்பர் அடிகளார். அதில் 6வதுபாடலில் ''பவ்வம் திரியும் பருப்பதமும்'' என்னும் தொடர் காட்சி தருகின்றது. இங்கு பவ்வம் என்பது பேராழி 'பவ்வம் திரியும் பருப்பதம்' என்பதற்குப் ''பேராழியின் அலைகள் வந்து மோதும் மலை என்பது பொருள். இந்த நிலையில் 'பருப்பதம்' என்பது ஸ்ரீ பருப்பதம் ஆதலும் கூடுமோ?

(8ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுது

நல்லை ஆதீன குருமகாசந்நிதானத்தின் மணிவிழா நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. பலரும் அவர் செய்து வரும் அரும்பெரும் பணிகளைப் பாராட்டினர்.

வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும், மக்கள் குலம் சிறப்புடன் பொலியவும். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அவதரித்தார்கள். அவரது பாதமலரைத் துணைக்கொண்டு நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் திருத்தொண்டை ஈழத்தில் மட்டுமல்ல பாரதநாட்டிலும் மலேஷியா முதலிய தமிழ்கூறும் நல்லுலகிலும் பரப்பிவருகின்றார்கள். இதுபற்றி சிறப்பாக ஈழத்துச் சைவசமூகம் பெருமைப்படவேண்டும்.

★

ஆதீனச் செலவுகளுக்கு வருமானம் எதுவுமில்லை. ஒருநாளைக்கு மூன்று அல்லது நான்கு இடங்களுக்குச் செல்லுகின்றார். சிறு சிறு தொகைகள் கிடைக்கின்றன. தம் தொண்டையாலேயே சைவத்தொண்டை'' சுவாமிகள் செய்துவருகிறார்கள்! வயது அறுபது ஆகிறது. உடல் நலமும் அவ்வளவு மேலாக உள்ளதென்று கூறுவதற்கில்லை. இதனால் தமக்கு அடுத்தபடியாக பட்டத்துக்கு வர ஒரு 'இளவரசையும்' இப்போது நியமித்திருக்கிறார்கள்.

மிகுத்தாழ்வுற்ற நிலையிலுள்ள சைவம் மீண்டும் தலைதூக்கி மேன்மைகொள் சைவநீதி நாடெல்லாம் விளங்க வேண்டுமாயின், இந்தச் சைவ ஆதீனம் பணக்கவலைகள் சிறிதுமின்றி இயங்கவேண்டும். சைவ அரசர்கள் ஆண்டகாலமாயின் இவ்வித ஆதீனங்களுக்கு அமோகமான மானயங்கள் கிடைத்திருக்கும். இன்று தமிழ் அரசர்கள் இல்லை. ஆனால் சைவ சமூகத்திலே பல செல்வந்தர்கள் உண்டு. பணத்தைப் பூட்டிவைத்து என்ன செய்யப் போகிறோம்? தம்மையே இந்த ஆதீனத்தின்மூலம் சைவ உலகுக்கு ஸ்ரீ பரமாச்சார்யசுவாமிகள் ஒப்படைத்திருப்பதால் அவரது தியாகசேவைக்கு சைவ மக்கள் செய்யும் உதவிகள் சைவ தர்மங்கள் ஓங்கவும் மக்கள் மேலான வாழ்வு வாழவும் உதவுவதாகும்.

★

அந்த ஆதீனத்திலே திருமுறைத் தமிழ் வளர்கின்றது. அன்னதானங்கள் நடக்கின்றன. ஆதீனகர்த்தரின் புகழ் அவரது அரிய சேவையின் மூலம் நாடுநாடாகப் பரவி வருகின்றது. ஆதீனத்தின் மூலம் பல அருங்கலைப் பயிர்களும் செழிக்கின்றன.

திருவருளால். ஆதீனத்துக்கு நல்லூரிலே ஒரு நல்ல இடம் கிடைத்துள்ளது. அது ஒரு பழைய கட்டிடம். அதை நவீன வசதிகளுடன் கட்டவும் வெளிநாடுகளிலிருந்துவரும் பெரியார்கள் வசதியாகத்தங்கி இருக்கவும் கூடியவகையில் கட்டவேண்டும்.

இடமும் ஏவலும் உண்டு. பொருள்தான் தேவை. இந்த ஆதீனம் செய்துவரும் தெய்வீகப்பணிகளின் அருமையை சைவமக்கள் உணர்ந்துவிட்டால் பொருளும்அமோகமாகச் சேருமென்பதில் ஐயமில்லை.

தர்மஸ்தாபனங்களுக்கு மக்கள் தாராளமாகப் பொருள் உதவி செய்தாலே தர்மங்கள் செழித்தோங்கமுடியும். தர்மங்கள் வளர்ந்தாலே குறை

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தலைவர்களுக்கு சமர்ப்பணம்

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களும் அவர்களின் தலைவர் களும் இங்கு பெரும்பான்மை இன மக்களான சிங்கள மக்க ளுடன் அவர்கள் அனுபவிப் பதனைப் போன்ற சரிசமமான உரிமைகளைப் பெற்று வாழ லாம் என்ற எண்ணத்துடன் இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதலாக முயன்று வந் துள்ளனர்.

சிங்களத்துக்கும் தமிழுக் கும் சம அந்தஸ்து என்ற தமிழ் பேசும் மக்களின் முதற்குரல் நசுக்கப்பட்டது.

பின்னர் சமஷ்டி ஆட்சி முறையில் சிங்கள மக்களும் தமிழ்பேசும் மக்களும்இணைந்து வாழலாம் என்ற எண்ணத்தி லும் மண்போடப்பட்டது.

இதனை வென்றெடுக்க ஆட் சிக்கு மாறி மாறி வந்து சிங் கள மக்களின் இருபெரும் கட் சிகளுடன் தமிழ்பேசும் மக்க ளின் சார்பில் அவ்வப்போது தமிழ்த் தலைவர்கள் செய்து கொண்ட பேச்சுவார்த்தை கள் ஒப்பந்தங்கள் அளித்த வாக்குறுதிகள் எல்லாமே ஆற் றில் கரைத்த புளியாகின.

1948 தொடக்கம் இன்று வரை ஐக்கிய இலங்கையை உருவாக்கத் தமிழ்த் தலைவர் கள் மேற்கொண்ட அரும் பெரும் முயற்சிகள் அத்தனை யும் எத்துணைப்பயனையும் அளி க்கவில்லை. அத்துடன் தமிழ் பேசும்மக்கள் 1972 க்குப் பின் இரண்டாந்தரப் பிரஜைஎன்ற நிலையிலும் பார்க்க இன்னமும் கீழானதொரு நிலைக்குத் தள் ளப்பட்டனர்.

இவற்றினையெல்லாம் கண்டு அனுபவித்து அறிந்த தமிழ்த் தலைவர்கள், ஆங்கிலேயரிடம் இழந்த தமிழ் அரசை மீட்டெ டுத்துத் தம்மைத்தாமே ஆளு வதன் மூலமேயே தமிழ்பேசும் மக்கள் தமது தனித்துவம்- மகத்தும் மிக்க மொழி மதம் கலை பண்பாடின்னோரன்னவற் றினைப் பேணிப் பாதுகாத்துப் போற்றிவளர்க்கமுடியும்என்று தீர்மானித்து அந்தத் தமிழ் அரசை- தமிழ் ஈழத்தை வென் றெடுக்கத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பாரிய அமை ப்பினை அமைத்து இந்த அமை ப்புக்கெனக் கொடி உதய சூரி யன் கொடி ஒன்றினையும் உருவாக்கி அகிம்சை வழியில் நின்று போராடிவருகின்றனர்.

த. வி. கூட்டணியினர் எதிர் வரும் பொதுத் தேர்த லின் போது தமிழ் ஈழக் கொள்கையைத் தமிழ்பேசும் மக்களின் முன்வைத்துக் கொள்கைவிளக்கம் அளித்து தமிழ்ப்பேசும் மக்களின்பூரண ஆதரவைப் பெற்றுத் தமது கொள்கைக்கு மேலும் பொலி வும் வலிவும் சேர்த்திடத் திட் டமிட்டுள்ளனர். இதற்கென ஆக்கபூர்வமான நடவடிக்கை களிலும் முனைந்துள்ளனர் எனப்பத்திரிகைச் செய்திகள் பகர்கின்றன.

## விவாதமேடை

இந்த வேளையிலேயே எதிர் வரும் பொதுத் தேர்தலில், இதே தமிழீழக் கொள்கை யினைக் கொண்டதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவ்வப்போது மேற்கொண்ட போராட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து கண்டன அறிக் கைகளை நாளேடுகளில் வெளி யிட்டதன்றி வேறெந்தவித மான ஆக்கபூர்வமான நடவ டிக்கையினையும் மேற்கொண்ட றியாததுமான தமிழர் சுயாட் சிக்கழகமும் தமிழ் ஈழக்கொள் கையினைத் தமிழ்பேசும் மக்க ளின் முன்வைத்துப் போட்டி யிடவிருப்பதாகவும், தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியி டுகின்ற தொகுதிகளிலெல் லாம் கழகமும் போட்டியிடு மெனவும் தமிழ்த் தினசரிக ளில் செய்திகளும் அறிக்கை களும் வெளியான நாளிலி ருந்து விடுதலை உணர்வுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் என்னைப்போன்று வேதனையில் ஆழ்ந்திருப்பரென்பது திண் ணம்.

ஒருகொள்கைக்காக இரு அணிகளா? பட்டும் கெட்டும் இன்னமுமா தமிழ்த் தலைவர் கள் பூரணமாக இணையஒருப் படவில்லை? ஒரே கொள்கைக் காக இரண்டாகப் பிரிந்து நின்று போராடுவதிலும் பார்க்க ஒன்றாக ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் எத்த னையோ அரும்பெரும் சாத னைகளை நிகழ்த்த முடியும் என்ற பேருண்மையினை இன்ன முமா எமது தலைவர்கள் உணர வில்லை? இவ்வாறு பிரிந்து நிற் பதனால் எம்மிடையே இன் னமுமுள்ள "சிலருக்கு சில வாய்ப்பினை" ஏற்படுத்திக் கொடுக்கப்போகின்றோம் என் றதனை இந்தத் தலைவர்கள் சற் றேனும் சிந்தித்துப்பார்க்கவில் லையா? ஆதலின், தமிழ் ஈழக் கொள்கையினை ஏற்றுக்கொண் டும் இன்னமும் பிரிந்து நிற் கும் தமிழ்த் தலைவர்கள் தம் மிடையே யாதாவது தனிப் பட்ட கோபதாபங்கள் இருப் பின் அவையெல்லாவற்றையும் தமிழ் பேசும் மக்களின் நல் வாழ்வு கருதித் தற்காலிகமாக வாவது மறந்து, கௌரவப் பிரச்சினைகளை (இருப்பின்) யும் இன்னல் மிகுந்த இந்த வேளை யிலாவது விட்டுவிட்டு; விட் டுக்கொடுக்கும் பரந்த மனப் பான்மையுடன் கூடிப் பேசி இணைந்து ஒரே அணியிற் செய லாற்றும் வண்ணமும்; தமிழ் ஈழப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களை அவ்வப்போது ஏற்ற வழியில் நடத்திச் செல் லும்வண்ணமும் தமிழ்த் தலை வர்களின் ஒற்றுமையின்மை கண்டு வேதனையிலாழ்ந்துள்ள தமிழ் பேசும் மக்களின் சார் பில் இந்தப் பணிவான வேண் டுகோளினைத் தமிழ் ஈழக் கொள்கையினை ஏற்றுள்ள- தமிழ் பேசும் மக்களின் விடு தலையில் நாட்டம் கொண் டுள்ள அத்தனை தமிழ்த் தலை வர்களின் திருமுன்பு சமர்ப்பிக் கின்றேன்.

முருகு

திருக்கேதீஸ்வரம்.

# அரசியல் வடுக்கள்

பல அறிஞர்களால் உலக மெங்கும் அரசியல் சித்தாந் தங்கள், தத்துவங்கள், நடை முறைகள் ஆகிய சிந்தனைகள் அறிவாக வெளியிடப்பட்டுள் ளன. சூழல், சுற்றுடல்போன்ற சமூக இயல்புகள் மனிதனை அரசியல் சிற்பியாக்குகிறது.

திரு. சுந்தரலிங்கம் தனது எண்ணங்களாகவந்தமுடிவு களைக் காட்டி, இராசசிங்கம், வள்ளல் போன்றோர், காசி ஆனந்தன் போன்றோர்களுக்கு விளக்கங்காட்ட முற்பட்டு சாம, பேத, தான, தண்டம் என்ற வாக்கின் வழி தமிழன் உரிமைப்போராட்டம் நடாத் தப்படவேண்டுமென்று கேட் டுள்ளார்.

திரு.சுந்தரலிங்கம் ஒருதிர்க்க தரிசியும், பல கோணங்களில் தனது வாழ்வை அமைத்து அனுபவமும், அறிவும் பெற்ற வர். தானே பல பிழைகளைக் கடந்த காலங்களில் செய்து விட்டதாகவும். இப்பிழைகளை திருத்திச் சரியானபோக்கில் அரசியல் போராட்டத்தை அமைக்கவும் விரும்புகிறார்.

சரித்திரத்தைப் புரட்டிப் புரட்டி விவாதிக்கிறார்கள்மற்ற வர்கள். இதில் பிரயோசனமு மில்லை. இதனால் சிறந்த மார்க் கம் காணத் தடையுமிருக்கக் கூடாது.

இளைஞர்கள் பாராளுமன் றம் செல்லவேண்டும் என்பது ஒரு கருத்தற்ற விவாதம். புத் திக்கூர்மையும், அறிவுத் தெளி வும், கருமச்சிந்தனைகளும் கொண்ட எவராவது பாராளு மன்றம்சென்று எம் நிலையை யும், நிலைமையையும் வெளிப் படுத்தலாம். ஆனால் அறிவற்ற எவராவது, இளைஞராவது, முதியவராவது எமக்குக் களங் கத்தையே கொண்டுவந்து சேர்ப்பர்.

**சி. பசுபதி**

அறிவுள்ள சுந்தரலிங்கத்தை மக்கள் நிராகரித்த தவறை உணரமுற்பட்டால் அதுவே பெரும் உண்மையைப் புலப் படுத்தும்.

செல்வநாயகம் நடத்திவரும் போராட்டமும், காட்டிவரும் பாதையும் எதிர்பார்த்தவிளைவு களை எமக்குக் காட்டவில்லை என்பதும், அவர்நடைமுறைக ளால் காட்டிய பாதைகள் மக்களைப் பிழையான வழிக்கு இழுக்கின்றதுஎன்பதும் விவாத மாகக் காண்கிறேன்.

எந்த ஒரு போட்டியும், போராட்டமாக அரசியலில் காண்பதுண்டு. போராட்டங் கள் அறிவுள்ள தலைவர்களால் நடாத்தப்படும்பொழுது, மக் கள் அறிவாகிறார்கள். அறிவா கியமக்கள் சுதந்திரம்,ஒற்றுமை நீதியின்வழிநின்று போராட் டம், வாழ்க்கை, தொழில் முறைகளை நடாத்திவருவார் கள். சிறந்த கல்விமுறையுள்ள இலங்கையில் இன்னும் அடி மைத்தனமான உத்தியோக மோகம்தான் முதல்தொழில் முறை. படித்தமாணவர்கள் எல்லோரும் ஆசிரியர்களாகத் தான் வந்தால் எப்படித் தொழில்வளம் பெருகும். அல் லது எல்லோரும் மேசை, கதிரை, காகிதம் ஆகிய மூன்று கருவிகளை அமைத்து நாட்டில் அபிவிருத்தி தேடுவது?

ஆகவே ஒவ்வொரு பாடசா லையையும் ஒவ்வொருதொழிற் சாலையாக்கி, வெறும் ஏட்டுக் கல்வியை விடுத்து உழைப் புடன் கூடிய அறிவு மார்க்கம் கண்டால். தமிழினம் இலகு வில் சுயதேவையைப் பூர்த்தி யாக்கும்.

பிறரை விளங்கி, பிறரால் விளங்கி, பிறருடன் விளங்கி வரும் வாழ்க்கைப் பாதையை யும், செல்வநாயகம், பல காலம்பரப்பிவந்த வாழு வாழ விடு என்ற நற்சிந்தனையும், சனநாயக அறிவின் பிரயோச னமும், கடந்தகாலச் சரித்திர வளர்ச்சியும் கலாச்சாரப் பண் பாடும் உணரும் தமிழ் மக்கள் வெற்றியைக் காண்பர்.

கோபம், ஆத்திரம் கொண்டு விவாதிப்பவர்கள், கொள்கை, கட்சி என்று தன்னைக் கட்டுப் படுத்துபவர்கள்,சாதி, சமயம், என்றுஒதுங்குபவர்கள்போன்ற பல குணங்களைக் கொண்ட அமைப்பு தமிழ்ச் சமுதாய அமைப்பு.

ஆகவே மக்களின் நலனை நாடி அறிவுகளையும, பிரயோ சனமான பிரயாசம்கொண்ட அறிவுள்ள தலைவர்களேவேண் டுமேயொழிய, இளைஞர்கள் தான் வேண்டும்; கட்சிதான வேண்டும், தான்பிடித்த முய லுக்கு மூன்றுகால்தான் என்ற விவாதத்தை விட்டுவிட்டு,நீதி, நியாயம். நியதி, கடமை,பண் பாடு, நம்பிக்கை, துணிவு கொண்ட செல்வநாயகம்-சுந் தரலிங்கம் போன்றவர்கள் ஒற் றுமையாகச் செயல்படவைக் கும் பணியில் தமிழ் மக்கள் விஞ்ஞாபனம் காணவேண்டும்.

சுந்தரலிங்கத்துக்குப் பதில் போட்டேன், படித்துப்பார் என்று.

ஆகவே புதுவழிகாண, பல அறிஞர்கள் காணும், நல்லவற் றைத் தேர்ந்து,தீயவற்றை நீக் கும் வழிகளைக் காண தமிழர் ஒன்றுசேர விண்ணப்பிக்கி றேன்.

எம். பி. யின் சிபார்சு

# வேலை வழங்குவதற்குத் தேவையில்லை

## உப-சபாநாயகர் பேச்சு

கொழும்பு, வெள்ளி

"வேலை தேடுவோருக்கு ஆட்சி மன்ற உறுப்பினர் சிபா ர்சுக் கடிதம் வழங்கும் முறை விரும்பத்தக்கதல்ல இம்முறை மாறறப்பட்டு தகுதியானவர் களுக்கு வேலை வழங்குவது தெரிவுக் குழுக்களின் கடமை யாகவேண்டும்." என்று தேசிய அரசுப் பேரவை உப- சபாநாயகர் திரு. ஐ. ஏ. காதர் கொழும்பு சமூக சமய நிலைய ஆதரவில் நடைபெற்ற "பொதுத்தேர்தல்" பற்றிய கருத்தரங்கில் தலைமை வகித் துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசு கையில், "தேர்தல் ஆட்சே பனை மனுக்கள் வெகுவாகக் குறைந்துவிட்டமை நல்ல சகு னம்" என்றார்.

### அன்றைய நிலை

"கடந்தகால பொதுத் தேர்தல் நடவடிக்கைகள்" என் பது பற்றி திரு. பி. ஜே. பர் ணந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"டொனமூர் அரசமைப் பில் நடைபெற்ற தேர்தல் களின்போது பெரும்பான்மை வாக்காளர் கல்வியறிவற்றவர் களாக இருந்தனர். வாக்குச் சீட்டுக்களை விற்றல், ஆள் மாறாட்டம் செய்தல், பயமுறு த்தல் போன்ற ஊழல்கள் இடம்பெற்றிருந்தன. அரசியல் கட்சிகள் எவையும் இருக்க வில்லை. எனவே அபேட்சகரின் சொந்தத் தகைமையைக் கொண்டே வாக்காளர் வாக் களித்தனர். சாதி, இனம், சமயம் ஆகிய அம்சங்கள் வாக் காளரிடை பெரிதளவில் செல் வாக்குப் பெற்றிருந்தன.

1947-ல் சோல்பரி அரசிய லமைப்பின்போது பிறப்பிக்கப் பட்ட தேர்தல் சட்டங்கள் இக்குறைகளை நீக்க முயன்றன. தேர்தல் தொகுதிகளின் எல்லை கள் நிர்ணயிக்கப்பட்டன. பல் வேறு பிரிவினருக்கும் பிரதிநிதி த்துவம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வோர் அடையா ளச் சின்னம் வழங்கப்பட்டது. இதன்மூலம் வாக்குச்சீட்டுகளை விற்பது தடுக்கப்பட்டதுடன் அரசியற் கட்சி முறையும் வலு ப்படுத்தப்பட்டது. ஒரேநாளில் தேர்தல் நடைபெறவேண்டு மென்று விதிக்கப்பட்டது. அபேட்சகர் நியமனம் நடை பெற்ற நாளிலிருந்து சுவரொட் டிகளை உபயோகித்தல், கொடி களைப் பறக்கவிடுதல், ஊர்வல மாக வருதல் ஆகியவை தடை செய்யப்பட்டன. 1964ல் இரு ந்து தேர்தல் நாளில் வாக்காள ருக்கு தனியார்வாகனப்போக்கு வரத்து தடைசெய்யப்பட்டது. பத்திரிகைகளும் வானொலியும் தாம் ஆதரிக்க விரும்பிய அர சியற் கட்சிகளுக்கு ஒரு போதுமே வெற்றியைப் பெற் றுத்தரவில்லை.

இக்காலத்தில் மக்களின் கல்வியறிவும் அரசியல் முதிர்ச் சியும் பெருகியுள்ளமையால் தேர்தல் குற்றங்கள் முன்னி லும் குறைந்துள்ளன எதிர்க் கட்சி அபேட்சகர்களுக்குத்தேர் தல் பிரசாரத்தின்போது இடை யூறுகள் அதிகரித்து வருவதைத் தடுக்க, தேர்தல் காலத்தில் பொலிஸாருக்குச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான அதிகா ரம் கொடுக்கப்படவேண்டும்.

அரசியல் கட்சியொன்று தேர்தலில்வெற்றிபெற்று ஆட் சிக்கு வந்தபின், நாளடைவில் கட்சித் தலைவர்களுக்கும் கட்சி யின் சாதாரண உறுப்பினர் களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள்குறைந்துபோகின் றன. கட்சித் தலைவர்கள்ஆட்சி பீடமேறி; அதிகாரிகளை நம்பி ஆட்சி செய்து. பொதுமக்களை மறந்துவிடுகிறார்கள். ஆட்சியி லுள்ள எந்த அரசாங்கமும் அடுத்துவரும் தேர்தலில் வீழ் ச்சியடைவதற்கு இது ஒரு முக் கியமான காரணமாகும்.

### நிமால் சேனநாயக்கா

அடுத்ததாக திரு. நிமால் சேனநாயக்கா பேசுகையில் "தேர்தல் சுதந்திரமாக நியாய மான முறையில் தங்குதடை யின்றி நடைபெறவேண்டும். பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் தேர்தல் முறை செயற்படுத்தப்பட வேண்டும். இம்முறையில் சந் தேகம் ஏற்படுமாயின், இன்று பாகிஸ்தானில் காணப்படுவது போன்று கலவரம் உண்டா வது திண்ணம். தேர்தல் குற் றங்களிலே "தகாத செல்வாக் கைப் பிரயோகித்தல்" என் பதில் சமயக்கூட்டங்களில் ஓர் அபேட்சகருக்குச் சாதகமாகக் கூறப்படுவதும் குற்றமாகக் கரு தப்படும்" என்றார். (உ)

# கொள்ளை முயற்சி தோல்வி இரு இளைஞர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், சனி

இரவு வேளை வீடொன்றி னுள் புகுந்த இரு இளைஞர்கள் அங்கிருந்த பெண்ணின் தாலிக் கொடியைக் கொள்ளையடிக்கும் முயற்சியில் தோல்வி கண்டன ராம்.

இக்கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் பொதுமக்க ளால் பிடிக்கப்பட்டு பொலி சாரிடம் ஒப்படைக்கப்பட் டார்.

இரண்டாவது சந்தேகநபர் பொலிசாரால் கைது செய்யப் பட்டார்.

சம்பவதினம்இரவு 9-15மணி யளவில் மிக்கேல் நவரத்தினம் என்பவரது வீட்டிற்குள் பிரஸ் தாப சந்தேகநபர்கள் தாலிக் கொடியைக் கொள்ளையடிக்க முற்பட்டபோது தம்பதிகளு டன் இழுபறிப்பட்டதாகவும் அவர்கள் சந்தேகநபர்களால் தாக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அடையாள அணிவகுப்பின் பொருட்டு இவ்விரு சந்தேக நபர்களும் இம்மாதம் 15-ம் திகதிவரை றிமாண்டில் வைக் கப்பட்டுள்ளனர். (உ)

......

# புதிய நெறியாளர் குழு

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய இயக்கு நர் சபை இயக்குநர்களாக கூட்டுறவு அமைச்சரால் பின் வருவோர் நியமனஞ் செய்யப் பட்டுள்ளனர்.

திருவாளர்;என்.சிவஞானம், சீ.கனகசபை, வி.குமாரசாமி, எம்.மகேந்திரன், ஈ.ரவீந்திரன் எஸ். வைரவிப்பிள்ளை, எஸ்.ஜி. தேவா, எம்.சிவஞானம்.

# நெல்லியடி பஸ் நிலையத்தில் பிரயாணிகள் அவதி

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடி பஸ்நிலையம் படுமோசமான நிலைமைக்குப்பின் தள்ளப்பட்டிருக்கும் இன்றைய நிலையிலும் அது இ. போ. ச. அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்காதுள்ளமைபற்றி பஸ் பிரயாணிகள் மத்தியில் மிகுந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது. பஸ்நிலையத்தில் ஆங்காங்கு பள்ளங்கள் இருப்பதால் பிரயாணிகள் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாக வேண்டியுள்ளது. இதனால் பஸ்வண்டிகளின் 'ஸ்பிறிங்பிளேட்'டுகளில் பாதிப்பு ஏற்பட்டு பின்னர் நிரந்தரமாக அவை ஓடாது நிற்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும் 'கியூ' வரிசைமுறை அனுஷ்டிக்கப்படாததால் குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் இடறித் தள்ளப்பட்டு மீண்டும் அடுத்த பஸ்வண்டிக்காகப் பலமணிநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. பஸ்நிலையத் தங்குமிடம் பிரயாணிகளுக்கு வெயில், மழை ஆகியவற்றிலிருந்து எதுவித பாதுகாப்பு மளிக்காமையால் அவர்கள் கடைவாசல்களில்பதுங்கவேண்டியும் உள்ளது. (அ)

---

## செல்வச் சந்நிதி சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. திரு. செ. விசாகரத்தின ஐயர் சங்காபிஷேகத்தை நடத்திவைப்பார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் அன்றைய தினம் 'அருணகிரிநாதர்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். (ஆ)

......

## தனியாக இயங்கும்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இதுவரை காலமும் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வைத்தியஅதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்தவட்டுக்கோட்டை சித்தன்கேணி வீதியிலுள்ள அரசினர் மத்திய மருந்துச்சாலை இம்மாதம் தொடக்கம் தனியான வைத்தியநிலையமாக இயங்கி வருகின்றது.

இந்தவைத்தியசாலை மத்திய மருந்துசசாலையும் 2மைல்தூர வித்தியாசத்தில் இருந்தும் ஒரேநிர்வாகத்தின்கீழ் இயங்கி வருவதினால் பல்வேறு நிர்வாகம்பிரச்சனைகள் ஏற்படுவதாகவும் இதனால் நோயாளர்களும் மிகவும் சிரமம் அடைவதாகவும் வட்டுக்கோட்டை எம்.பி.திரு.ஆ. தியாகராசா சுகாதார அமைச்சுக்கு எடுத்துக் காட்டியதை தொடர்ந்து இந்த நிர்வாக மாற்றம் ஏற்பட்டுள்ளது.

---

யாழ். ஆயுர்வேதக்கல்லூரி விவகாரம்:

## அங்கீகாரமற்ற பட்டதாரிகள் விரிவுரையாளர்களாகஇல்லை

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 6ந் திகதிய பத்திரிகையில் டி. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் க. மருதையினார் யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி தொடர்பாக வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக மேற்படி கல்லூரியின் விரிவுரையாளர் டாக்டர் திருமதி ப. சிறிதேவி விடுத்துள்ள அறிக்கை விபரம் வருமாறு;

''இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட யாழ். லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியை அரசு பொறுப்பேற்க வேண்டுமென்றும் கைதடியில் நிறுவப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் நடத்தவேண்டுமென்றும் மாணவர்களும், நாமும் கோரி வருவது நியாயமானது. எமது கல்லூரியின் நிர்வாகப் புனரமைப்பின் பின்பு விரிவுரையாளர் நியமனம், தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டது. சிலர் குறிப்பிடுவது போல் அங்கீகாரமற்ற பட்டதாரிகள் எவரும் விரிவுரையாளர்களாக நியமிக்கப்படவில்லை. இங்கு அங்கீகாரமற்ற பட்டதாரிகள் எவரும் விரிவுரையாளராக இல்லை. இங்கு விரிவுரையாற்றும் விரிவுரையாளர்கள் அனைவரும் சம்பளம் பெறும் நோக்கத்துடன் வேலை செய்வதில்லை. சேவையின்அடிப்படையிலேயே மிகக் குறைந்த சலுகைப் பணம் பெற்று முழு நேரமாகச் சேவையாற்றிவருகின்றனர்.

புதிய மாணவர் தெரிவும் தகுதியின் அடிப்படையிலேயே நடைபெற்று வந்துள்ளது. சித்த ஆயுர்வேத வைத்தியத்தைத் தமிழில் கற்கும் மாணவர்கள் அரசினர் கல்லூரியில் தெரிவுசெய்யும் போது மிகக் குறைந்த அளவிலேயே தெரிவுசெய்கின்றனர். இதுவும் ஒருவகைத் திட்டமிட்ட தரப்படுத்தலே. சிங்கள மொழி மூலம் ஆயுர்வேதக் கல்வியைக் கற்பதற்கு இரண்டு பெரிய கல்லூரிகள் தென்னிலங்கையில் இருக்கின்றன. அங்கே மிகக் கூடுதலான மாணவர்களைத் தெரிவு செய்கின்றனர். சித்த வைத்தியத்துறையின் அபிவிருத்தி கருதியே நாம் இங்கே கூடுதலான மாணவர்களைத் தெரிவுசெய்கிறோம். இது தவறென்று எவரும் கருதமுடியாது. புதிய மாணவர்களைத் தெரிவுசெய்யும்போது மாணவர்கள் எண்ணிக்கையை அரசு மட்டுப்படுத்தவில்லை.

அரசினர் பண உதவியின்றி குறைந்த அளவிலான மாணவர்களை வைத்துக்கொண்டு கல்லூரியை இயக்குவது இயலாதது. எமது கல்லூரியில் பரம்பரை வைத்தியர்களின் வழிவந்தவர்களுக்குக் கூடுதலான சந்தர்ப்பங்களைக் குறிக்கப்பட்ட தகுதியின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்றது. இதனால் வைத்தியர்களின் பாரம்பரியம் பேணப்படுகிறது.

1962ம் ஆண்டின் பின் அரச அங்கீகாரத்தைக் கல்லூரி இழந்தபோதிலும் இங்கு படித்துப் பட்டம் பெற்றோர் அதிக அளவில் அரசாங்கத்தில் நியமனம் பெற்றுள்ளனர். இது எமது கல்லூரியின் தகைமைக்குச் சான்றாகும்.'' (உ)

---

கிளிநொச்சி சம்பவம்

## சந்தேகநபர்களுக்கு தலா 5000 ரூபா பிணை!

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியில் உள்ள அறையொன்றில் இளம் பெண்ணுடன் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான நான்கு பேரும் தலா 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி நீதவான் திரு. இராஜநாதன் முன்னிலையில் சந்தேக நபர்கள் நால்வரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி பொன். வெற்றிவேலு, சட்டத்தரணி வி. பி. கார்த்திகேசு ஆகியோர் ஆஜரானார்கள்.

சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணிகள் கோரியதைத் தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேல்விசாரணை இம்மாதம் 11-ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. (உ)

---

## தாலிக்கொடி கொள்ளை: ஏழாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

இரவுவேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 5ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தாலிக்கொடி ஒன்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் ஏழாலையில் நிகழ்ந்துள்ளது.

இம்மர்மத் திருட்டுத் தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட புகாரையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் இ. ஏ.ஏ.காதர் தீவிர புலன் விசாரணை புரிகின்றார்.

சந்தேகத்தின் பேரில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (உ)

---

## பால்மா விற்கமறுத்தவர் 500 ரூபாவை இழந்தார்

யாழ்ப்பாணம், சனி

'லக்டோஜன்' பால்மாவை வைத்துக் கொண்டு விற்க மறுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்துஅவருக்கு ரூ.500அரசு செலவாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கு யாழ். விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு நா. சண்முகத்தால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என். சிவபிள்ளை என்பவருக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் இத்தீர்ப்பை வழங்கினார் (உ)

---

தமிழினத்தின்

## ஒற்றுமை நிலைக்க மூதறிஞர் நீடுவாழவேண்டும்

யாழ்ப்பாணம், சனி

'30 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழர்களை விடுதலை இலட்சியத்தின் அடிப்படையில் அழைத்துச் செல்லும் பெருமைக்குரியவர் மூதறிஞர் செல்வா ஆவார்.' ஐந்துக்கு மேற்பட்ட பொதுத் தேர்தல்களில் ஒரே இலட்சியத்தின் அடிப்படையில் வாக்களிக்கும் வகையில் மக்களைப் பண்படுத்தி வருபவர் மூதறிஞர் செல்வாவாகும். இனிமேலும் இதேபோன்று தமிழர்கள் ஒற்றுமையாகவும் கட்டுக்கோப்பாகவும் வாழ்வதற்கு தந்தை நம்மத்தியில் வாழவேண்டியது அவசியமாகும்.'

இவ்வாறு ஊர்காவற்றுறை தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் கூறினார்.

மூதறிஞர் செல்வாவுக்கு பூரண சுகம் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்தனையும் வழிபாடும், விசேட பூஜையும் புங்குடுதீவுபாணவிடைச்சிவன் ஆலயத்தில் நடைபெற்றன.

இளைஞர் பேரவையின் புங்குடுதீவுக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பிரார்த்தனையைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 'இலட்சக் கணக்கான சொந்தப் பணத்தை இன நன்மைக்காகச் செலவிட்டு இயக்கத்தை வளர்த்த பெருமகன் இவர். தோல்விகளையோ பதவிகளையோ துச்சமென மதித்து, துயருற்று நிற்கும் தமிழினத்துக்கு தாணை நின்று வருபவர் தந்தையவர்கள். தமிழ் இளைஞர்களதும் மாணவர்களதும் வளமான வருங்காலத்துக்காக தமிழ் ஈழம் மலரவேண்டுமென விரும்பும் தந்தையின் வாழ்வு நீடிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெரும் பிரார்த்தனையாகும் என்றார்.

திருவாளர்கள் அ. சண்முகநாதன், எஸ். சர்வானந்தன், பொ. நாகேசு, க. சோமாஸ்கந்தன் உட்பட பலர் உரையாற்றினர். (உ)

---

## யாரை ஆதரிப்பது?

பண்டத்தரிப்பு, வெள்ளி

' அகிலஇலங்கை ஆசிரியர்சங்கம் எந்தவொரு அரசியல்கட்சியையும் சாராது விஞ்ஞான ரீதியிலானசமதர்மக்கொள்கைகளை எந்த அரசாங்கம் நிறைவேற்ற முன்வருகிறதோ அந்த அரசையேஆதரிக்கவேண்டும்'.

இவ்வாறு தாய்ச்சங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் முக்கியதீர்மானமொன்று அகிலஇலங்கை ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளையின்விசேஷபொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளைத்தலைவர் திரு. மு. க. பத்மநாதன் தலைமையில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கூட்டததில்வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

---

......

## கல்வி அமைச்சு அனுமதி

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் ஏச். என். சி. ஈ. வகுப்பு ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து சமூக விஞ்ஞானம், மொழி, மனிதவியல் ஆகிய வகுப்புகளை நடத்துவதற்கேற்ற ஒழுங்குகளை கல்லூரி அதிபர் திரு.வி. நாகராசா கவனித்து வருகிறார். இக்கல்லூரியில் ஏச். என். சி. ஈ. வகுப்புகளை இவ்வருடம் ஆரம்பிக்க ஒழுங்கு செய்து தருமாறு மேற்படி கல்லூரி பெற்றார் ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சு அதிகாரிகளையும் வட்டுக்கோட்டை தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரையும் நேரில் சந்தித்து வற்புறுத்தியது குறிப்பிடத்தக்கது. (உ)

......

ஜி. ஜி.யின்

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டமொன்றை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இம்மாதம் 24-ம் திகதி நடத்துவதற்கு தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி உபகுழு முடிவு செய்துள்ளது.

டாக்டர் ஏ.எல்.ஏப்ரஹாம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் செயலாளர் திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அஞ்சலிக்கூட்டத்திற்கு சகல கட்சி பிரதிநிதிகளையும் அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. [க]

---

திருமலைக்கு

## தங்கத்துரையை நியமிக்கக் கோரிக்கை

திருகோணமலை, வெள்ளி

திருக்கோணமலை தமிழர் விடுதலைக்கூட்டணியின் பத்தாம் குறிச்சிக்கிளை திருகோணமலைத்தொகுதி வேட்பாளராகத் திரு. அ. தங்கத்துரையையே நியமிக்க வேண்டும் எனத் தலைமைப்பீடத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றினை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

கிளையின் பொதுச்சபைக் கூட்டம் திருகோணமலையில் திரு. கோ. சுந்தரம்கேசன் தலைமையில் நடைபெற்றது.

கிளை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. நவரெட்ணம், உபதலைவர்கள்: திரு. இ. நாகராசா, திரு. சு. ஜெயரெட்ணம்; திரு. மு. கோதண்டபாணி. செயலாளர்: திரு. சி. சச்சிதானந்தவேல், உபசெயலாளர்: திரு. சி சந்திரசேகரம், பொருளாளர்: திரு. சி. கந்தசாமி. எட்டுப்பேர் கொண்ட செயலவையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

---

## ச. ச. நிலையம் மூடப்பட்டுள்ளதாம்

யாழ்ப்பாணம், சனி

அராலி நாகேந்திரமடம் சனசமூகநிலையம் கடந்தபலமாதங்களாக மூடப்பட்டிருப்பதாகவும், பத்திரிகைகள், இதரசஞ்சிகைகள் அற்ற நிலையில் தாங்கள் இருப்பதாகவும் அராலி வாலிபர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் முறையிட்டுள்ளனர்.

சுமார் 50 வாலிபர்கள் கைச்சாத்திட்டு தாம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் பல மாதங்களாக கூட்டம் கூட்டப்படவில்லையென்றும், இதனைத் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (உ)

•••

## தட்டுப்பாடு

மன்னார், வெள்ளி

மன்னார்ப்பகுதியில் எப்பொருளையும் புதியவிலைக்குப் பெறமுடியாதுள்ளது. அத்துடன் விலை குறைக்கப்பட்ட பல பொருட்கள் மாயமாய் மறைந்துவிட்டன. முன்பு தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொண்டிருந்த பல பொருட்களை இப்போதுபார்க்கமுடியாதுள்ளது.

சீனி தற்போது பெறமுடியாத பொருளாகிவிட்டது. கூட்டுறவுக் கடைகளில்கூட இதைப்பெறமுடியவில்லை.

ராஜா (யாழ். நகர்)

எம். ஜி. ஆர்—வீரப்பா சாவித்திரி நடித்த

தினசரி 4 காட்சிகள்

**மகாதேவி**

10-வது வெற்றி வாரம்!

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா நடித்த

தினசரி 4 காட்சிகள்

**இதயக்கனி**

(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)

ஆனந்தன், குமாரி சச்சு ஈ. வி. சரோஜா, அசோகன் நடித்த

தினசரி 4 காட்சிகள்

**வீரத் திருமகன்**

(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்) ஃ முத்துராமன் ஃ சுஜாதா நடித்த

தினசரி 4 காட்சிகள்

**வாழ்ந்து காட்டுகிறேன்**

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா பத்மினி நடித்த

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.

**இரு மலர்கள்**

(புதியபிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)

ஃ சிவாஜி (இருவேடம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன் நடித்த

தினசரி 4 காட்சிகள்

**பாட்டும் பரதமும்**

(ஈஸ்ட்மன் கலர்)

ராணி [யாழ்நகர்]

ஈழத்து முன்னணிக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட

**"பொன்மணி"**

நடிகர்கள்:

★ கே. பாலச்சந்திரன்

★ சுபாஜினி

கதை-வசனம்: காவலூர் இராஜதுரை

டைரக்ஷன்: தர்மசேன பத்திராசா

இசை: ரொக்சாமி

RIO (Jaffna) Daily 4 Shows

**KING OF MOUNTAIN**

(The story of animal kingdom)

Ideal family entertainment

மிருகங்களின் இராச்சியத்தில் அவைகளின் வரலாறு. அவைகளுக்கு ஒரே ஒரு சட்டம்தான் வழக்கிலிருந்தது. அது வல்லவன் வாழ்வான் என்பதே! இருந்தபோதிலும் வல்லவன் வாழுமிடத்தில் அன்பும் இரக்கமும் நிலவுகின்றது. மிருகங்கள் தங்களுக்கு ஒரு தலைமையை உருவாக்கி ஒரு சமுதாயத்தையும் வளர்த்துவிடுகின்றன.

தங்களுக்குள் ஒரு அரசனையும் அரசியையும் உண்டாக்கிவிடுகின்றன.

மிருகங்களின் அரசனின் கதைதான் இது.

முழுக் குடும்பத்திற்கும் ஏற்ற சிறந்த படம்.

உங்கள் குழந்தைகளை உங்களுடன் கூடவே கொண்டுவந்தால் அவர்கள் உங்களை மறக்கவேமாட்டார்கள்.

ஒவ்வொரு குடும்பமும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய படம்.

கொழும்பில் ஓடிப் பெரும் சாதனையீட்டியது.


# ஈஸ்டர் நைட்



நாளை யாழ்ப்பாணத்தில் பொப்பிசையளிக்கவிருக்கும் ஏ. ஈ. மனோகரன்

யாழ்ப்பாணம் சென். பத்றிக்ஸ் கல்லூரி தொழில் பயிற்சி நிலைய நிதிக்காக "ஈஸ்டர் நைட்" என்னும் பொப் நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பத்றிக்ஸ் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வடபகுதியில் சிறந்த தொழில் பயிற்சி நிலையமொன்றை உருவாக்கி இளைஞர்களின் எதிர்காலத்தில் ஒளி வீசச்செய்வதற்காகவே சென்பத்றிக்ஸ் கல்லூரியில் தொழில் பயிற்சிநிலையம் அமைக்கப்படவுள்ளது.

ஈஸ்டர் நைட் நிகழ்ச்சிகள் சிறப்படைய டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ், திரு. எஸ். தேவராஜா, திரு. பி. சி. அன்ரனி ஆகியோர் அயராது பாடுபட்டுவருகின்றனர்.

இலங்கை வானொலி கவர்ச்சி அறிவிப்பாளரான ஜனுப் பி.எச். அப்துல் ஹமீட் நிகழ்ச்சிகளை தொகுத்தளிக்க சுப்பர் ஸ்டார் குழுவின் இசைமுழங்க இலங்கை முன்னணி பொப்பிசை கலைஞர்களான ஏ. இ. மனோகரன், திறிசிஸ்ரேர்ஸ், எம். எஸ். பெர்னாண்டோ, பேபி சந்திரிகா, மில்டன் மல்லவராச்சி, மக்ஸ்வெல் மெண்டிஸ், ரொனி ஹசன், அனில் பாரதி, எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் பாடி ரசிகர்களை மகிழ்விக்கவுள்ளனர்.


நாகம்ஸ் (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

**பால நாகம்மா**

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)

தினசரி 2-30, 6-30, 9-45

சனி, ஞாயிறு 10-30

சிவகுமார்-ஜெயசுதா

**பட்டிக்காட்டு ராஜா**

வெஸ்லி [மானிப்பாய்]

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

**சித்தூர் ராணி பத்மினி**


"தமிழினம்

## சம உரிமையுடன் வாழ ஐ. தே. க. வழிவகுக்கும்"

### மானிப்பாய் அமைப்பாளர்

யாழ்ப்பாணம், சனி

"சாதாரண பொதுமக்கள் தமக்குரிய இடத்தைப் பெறும் வகையில், புதியசமுதாயத்தை உருவாக்க புதியஆட்சி ஒன்றை அமைப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம்" என்று, மானிப்பாய் தொகுதி ஐ. தே. கட்சி பிரதம அமைப்பாளர் திரு. எஸ். அலோசியஸ், மானிப்பாய் வடக்கில் நடைபெற்ற ஐ. தே. கட்சி கிளை பிரசாரக்கூட்டத்தில் பேசும் போதுகூறினார்.

இக்கிளைக்கூட்டம் கிளையின் புதிய தலைவர் எஸ். சண்முக சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. "இன்றைய சமுதாய அமைப்பில் ஒருசாரார் கஷ்டப்பட்டு உழைக்க இன்னொரு சாரார் அவர்களின் உழைப்பை அட்டைபோல உறிஞ்சி உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். இப்படியான சமுதாய அமைப்பை ஐ.தே.கட்சி ஒழித்துக்கட்டும். ஆங்கிலம் படித்த பிரபுத்துவ குடும்பங்களின் ஆதிக்கத்தையும், வகுப்புவாதத்தையும் ஐ. தே. கட்சி நிர்மூலமாக்கும். சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் சமஉரிமை பெற்று தன்மானத்துடன் ஐக்கியமாக வாழ முயற்சிக்கும். இவற்றிற்கு எல்லாம்வருகின்ற தேர்தலிலே மக்களின் அனுமதியையும் அதிகாரத்தையும் ஜனநாயக ரீதியிலே நாடி நிற்கிறது ஐ. தே. கட்சி. ஐ. தே. கட்சி அமைக்கும் புதிய ஆட்சியில் எல்லா இன, மத, ஜாதி, மக்களுக்கும் சமநீதி கிடைக்க வழிசெய்யும்- மாளிகையில் வசிப்பவரானாலும் சரி, சேரியில் வசிப்பவரானாலும்சரி சம வாழ்க்கையை நடத்த உரித்துடையவர்களாவர்.

புதிய தலைமையில் ஐ. தே. கட்சி போராடுவதெல்லாம் புதிய சமுதாய ஆட்சியை அமைக்கவே. இலங்கை வாழ் மக்கள் யாவரும் பரிபூரண ஆதரவளித்தால் புதிய தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் நிச்சயம் புதிய ஆட்சி அமைத்து இளைய தலைமுறையினருக்கு புதிய யுகத்தை படைப்பார். இனக்கலவரங்களோ, வகுப்புவாதங்களோ, வன்முறைகளோ இல்லாத புதிய ஆட்சியை வழிநடத்துவார்" என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

இதன்பின் புதிய கிளை நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

தலைவர்: எஸ். சண்முகசுந்தரம், உபதலைவர்: ரி. ராஜலிங்கம், செயலாளர்: எஸ். செயலாளர் எஸ். குழந்தைவேல், உபசெயலாளர்: எஸ். திருச்செல்வம், பொருளாளர்: பி. அன்பழகன்.

8 பேர் கொண்டு நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. (உ)

## வீரசைவசமயப் பெருவிழா

யாழ்ப்பாணம், சனி

வீர சைவசமயப் பெருவிழாவாக கீரிமலை இராணுகாச்சிரம மகாகுரு சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்களின் 75 வது வயது பூர்த்தி வைரவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை - குரக்கன்துறை ஸ்ரீவீரபத்திர குருசுவாமிகோவிலில் கொண்டாடப்படும்.

மைசூர் குருபட வீரசிம்மாசனதிபதியும் ஸ்ரீகுருதாருகாச்சிரமஇராஜ யோகி அந்தர் ஜோதிசி வேதமூர்த்தி வீரையா சாஸ்திரிமுத்தவர்களும் விழாவில் கலந்து கொள்வார்.

அன்று பிற்பகல் ஐயனார் கோவிலில் இருந்து பல்லக்கு ஊர்வலமும் நடைபெறும்.

ஊர்வலத்தில் பரமாத்ம ஜோதி ஆசிரியர் ஸ்ரீசத்திய தாசன் குழுவினரும், சாயி சமிதியைச் சேர்ந்த திரு. வ. குமாரசாமி குழுவினரும் கலந்து கொள்வார். (உ)

## மே தினம் இணைந்து நடத்துவர்

யாழ்ப்பாணம், சனி

தமிழ்த்தொழிற் சங்கக் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன இணைந்து யாழ்.நகரில்மேதினத்தை பிரமாண்டமான அளவில் கொண்டாடவிருக்கின்றன.

யாழ்.நகரில் தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் கூட்டணியின் தொழிற் சங்கஇணைச்செயலாளர் திரு. மு ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்பொருட்டு மே நாள் அமைப்புக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (உ)


REGAL (JAFFNA) Daily at 4-15, 7-30 & 9-30 p.m. only

KENNETH HAIGH
NANETTE NEWMAN

in

**MAN AT THE TOP**

(Adults only) (Color)

ஈழநாடு
The EELANADU

# திருமுறைகளில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது எங்கள் ஐயம். ஸ்ரீ பருப்பதம்-ஸ்ரீசைலம்; அதுவே மல்லிகார்ச்சுனம் ஆகும். அது வடநாட்டில் கர்நூல் ஜில்லாவில் கிருஷ்ணாநதிக் கரையில் உள்ளது. இத்தலம் மலையை அடுத்திருப்பினும் பேராழியாகிய பவ்வத்தை அடுத்திருப்பதன்று. மேலும் இப்பதிகத்திலேயே பதினோராம் பாடலில் ''இலங்கார் பருப்பதத்தோடு ஏணார் சோலைக்காணர் மயிலார் கருமாரியும்'' எனப் பருப்பதம் பவ்வம் நீக்கிச் சொல்லப்படுவதால் பருப்பதமாகிய மல்லிகார்ச்சுனம் வேறு; பவ்வம் திரியும் பருப்பதம் வேறு என்பது முடிபாகும். இந்தநிலையில் கோணமலை 'பவ்வம் திரியும் பருப்பதம்' என்பது நாம் எல்லோரும் அளித்த ஒன்றாகும். எனவே இங்கு அப்பர் சுவாமிகள் குறிப்பிடும் ''பவ்வம் திரியும் பருப்பதம்', கோணமலை போலும்.

இதுவரை நாவேந்தர் கோணமலையைக் குறிப்பிட்ட இடங்களைக் கண்டோம். இனி, சுந்தரவள்ளலார் கோணேசுவரப் பொருளை வழுத்தியதைக் காண்போம். அப்பரும் சம்பந்தரும் ஷேத்திரக் கோவைகளைப் பாடியிருப்ப ஊர்த்தொகை, திருநாட்டுத்தொகை என்னும் புதிய அமைப்பைப் பாடியவர் சுந்தரர். அவர் அருளிய ஊர்த்தொகையில்,

> நிறைக்காட்டானே நெஞ்சத்
> தானே நின்றியூரானே!
> மிறைக்காட்டானே புனல்
> சேர் சடையாய் அனல்
> சேர்கையானே
> மறைக்காட்டானே திருமாந்
> துறையாய் மா கோணத்
> தானே
> இறைக்காட்டானே எங்கட்
> குன்னை எம்மான் தம்
> மானே

என வருவது மூன்றும் பாடல். இங்கு குறிப்பிடும் மாகோணம் ஈழநாட்டுத் திருமலையாகும். இதுவும் கும்பகோணம் ஆகுமோவெனின் அது பொருந்துவதன்று. கி. பி. 9ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் சுந்தரர். அவர் கும்பகோணத்தைப் பாடிய பதிகம் இதுவரை கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைக்காவிடினும் பிறதலங்களில் அதனை நினைந்து பாடியுள்ளார்.

> 'கோண்டங் கொண்டார்
> குடமூக்கிலும் கோவலும்
> கோத்திட்டையும்
> வேட்டங் கொண்டார்
> வெண்ணெய் நல்லூரில்
> வைத்தெனை ஆளும்
> கொண்டார்'

எனவருவது திருநாவலூர்ப் பதிகத்தில் 6ஆம் பாடல். இங்கே குறிக்கப்படும் குடமூக்கு என்பது கும்பகோணமாகும். எனவே கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலும் கும்பகோணம், குடமூக்கு எனவே வழங்கப்பட்டுவந்தமை தெளிவாகும். இவர்காலத்தில் மட்டுமன்று, 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார்காலத்திலும் கும்பகோணத்திற்கு, குடந்தை குடமூக்கு என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தமையை அவர் வழங்கிய திருப்புகழ்ச் செம்பாக்கள் வலியுறுத்தும். எனவே 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வன்றொண்டரும், 7-ம் நூற்றாண்டில்வாழ்ந்த அப்பர், சம்பந்தர்என்னும் இருவரும்பாடிய கோணம் என்பது திருக்கோணேசுவரமே என்பது வெள்ளிமலை.

இனி, சுந்தரர் பாடிய ஊர்த்தொகை 9ஆம் பாடலில் 'புகலூர்ப் போதாமூதூரா' என்னும்தொடர் காட்சி தருகின்றது. இங்குக் குறிக்கப்படும் மூதூர் எது? என்பது வினா. அப்பர் சுவாமிகளும் மூதூர் ஒன்றைப் பாடுகின்றார் தமது பாபநாசத் திருப்பதிகத்தில். 'அதிகை மூதூர் அரசினை' என்பது அவர்பாடற்பகுதி. இது மூதூருக்குத் தழுவுகோல் கொண்டுள்ளது. அதிகையாகிய மூதூர் என்பது இதன் பொருள். ஆனால் சுந்தரர் அடைமொழி எதுவுமின்றி 'மூதூரா' என்கிறார். திருவதிகைக்கு மூதூர் என்னும் பெயர் வழக்கு, இதுவரை கிடைத்த திருமுறைகளுள் வேறெங்கும்காணப்படவில்லை. எனவே சுந்தரர் பாடும்மூதூர், ஈழத்து மூதூராகுமாயின, அது திருமலையை அடுத்துள்ள அகத்தியர் தாபனம் என்ப்படும். 'திருக்கரசைப்பதி' ஆகவும் கூடும். திருகரசைப்பதி அகத்தியரால் தாபிக்கப்பட்டது எனத் தட்சிணகயிலாயபுராணம் சான்றுபகரும். இதற்குத் தலபுராணம்கூட உண்டு இது சோழர்காலத்தில் சிறப்புற்றிருந்ததென்ற வரலாறும் கூறும்.

மூவர் முதலிகளன்றி, திருமூலரும் தமது திருமந்திரத்தில் கோணமலையைச் 'சிவபூமி' எனக்குறிக்கின்றார். இவரை அடுத்து, கோணமலையைநினைந்தவர் பதினோராந் திருமுறையில் அங்கம் வகிக்கும் பட்டினத்துப்பிள்ளையார். இவர் நாயன்மார் நால்வருக்கும் பிந்தியவர் என்பதும் நம்பியாண்டார் நம்பிக்கு முந்தியவர் என்பதும் அவர்பாடிய பாடல்கள் வழங்கும் சான்றுகளாகும். மேலும் பத்திரகிரியார் காலத்தில் வாழ்ந்த பட்டினத்தடிகளும் இவரும் ஒருவர் அல்லர் என்பதும் தெளிவாகும். இவர் பாடிய நூல்கள் ஐந்து. அவற்றுள் 'திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியும் ஒன்றாகும். அதில்

> ''ஆலையங் கார்கரு காவைகச்
> சூர்திருக் காரி கரை'
> வேலையங் கேறு திருவான்மி
> யூர்திரு ஊறல்மிக்க
> சோலையங் கார்திருப் போந்தை
> முக்கோணம் தொடர்
> [கடுக்கை
> மாலையன்வாழ் திருவாலங்கா
> டேகம்பம் வாழ்த்துமினே,

என்பது 65ஆம் பாடல். மூவரையொத்து,பட்டினத்துப் பிள்ளையும் பலதலங்களில் ஏகம்பமுடையாரை வைத்துப் பாடுகின்றார். இப்பாடலில் முக்கோணம் இடம்பெறுகின்றது. முக்கோணம் என்பது திரிகோணந்தானே. கோணமலைக்குரிய பண்டைப்பெயர் திருகோணமலை. எனவே பட்டினத்துப்பிள்ளையாலும் வழுத்தப்பட்ட சிறப்பினையுடையது கோணமலை. ஆனால் வேறு வேறு சிலர் முக்கோணம் என்பது முக்கூடலாகிய திரிகூடமலை என்பர். கோணம் என்னும் சொல் கூடத்தைக் குறிப்பதன்று. எனவே அது பொருந்தாதென்க. இனி அவ்வாறு பொருந்துமாயினும் கோணேசுவரத்துக்குரிய பல திருப்பெயர்களுள் ஒன்று திரிகூடம் என இடம்பெறுதலால் முக்கோணம் என்பது கோணமலையையும் உள்ளடக்கியதெனலாம்.

(தொடரும்)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# ஆனந்தத்தின் எல்லைக்குஇட்டுச்செல்லும் அன்ரனியன் களியாட்டு விழா
## நாளை காவலூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

ஊர்காவற்றுறைத் தொகுதியில் இறப்பு நிகழ்ச்சிகள் பல கொண்ட அன்ரனியன் களியாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் அரங்கில் இம்மாதம் 17 ம் திகதி வரை நடைபெற்று மக்களை வியப்பிலும், மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்த விருக்கிறது.

வாழ்வின் வளத்துக்குரிய வகையில் வர்த்தக விவசாய கைத்தொழில் கண்காட்சிகள் இக்களியாட்டு விழாவில் இடம் பெறுகின்றன.

கருத்தைக் கவரும் சங்கீத நடன நிகழ்ச்சிகளும் உண்டு. நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் விதத்திலான நற்கருத்துக்கள் பொதிந்த நாடகங்கள் மெய்மறக்கச் செய்யும் பொப்பிசை அதிசயிக்கத்தக்க சர்க்கஸ் உல்லாச ஊட்டும் மெரிக்கோ ரவுண்ட், ராட்சத சக்கரம், உதிரத்தை உறையச் செய்யும் பாதாளக்கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டம் என்பன இக்களியாட்டு விழாவின் சிறப்பம்சங்களாகும்.

கராட்டிக் கண்காட்சி, குள்ளரின் சாகஸ விளையாட்டுக்கள், மாயாநகர்,நாககன்னிகை ரஷ்யன் மிஸ்ரி, கைத்திறன் விளையாட்டுக்கள் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சிறுவர், நடுத்தர வயதினர், முதியோர் உட்பட சகலரையும் உவகையின் எல்லைகே இட்டுச் செல்லும் வகையில் இக் களியாட்டு விழா அமையும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. (உ)

# திருமணப்பதிவு செய்யவந்த வாலிபர் கடத்தப்பட்டாராம்
## இளம்பெண் பொலிசில் புகார்

வண்ணார்பண்ணை, வெள்ளி

திருமணப்பதிவு செய்யச் சென்ற வாலிபர் கடத்திச் செல்லப்பட்டதாக இளம் பெண்ஒருவர் செய்துகொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவாலிபரை மீட்பதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

பல வருடகாலம் தன்னுடன் தொடர்புகொண்டிருந்த சித்தன்கேணியைச்சேர்ந்த சுப்பிரமணியம் மகேந்திரன் என்ற 30 வயது வாலிபன் தன்னைத் திருமணம் செய்வதற்காக யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் உள்ள வீட்டுக்குக்கொண்டு வந்ததாகவும்திருமணப்பதிவுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டசமயம் திடீரென்றுஅந்த வீட்டுக்குவந்த இளைஞரின் உறவினர் சிலர் மகேந்திரனை தன்னிடமிருந்து பிரித்து காரில் கடத்திச் சென்றுள்ளதாகவும் வட்டுக்கோட்டையைச்சேர்ந்த நாகரத்தினம் பரஞ்சோதி என்ற 25 வயது இளம்பெண் சங்கானைப்பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதைத்தொடர்ந்து தனது காதலன் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவரைத் தேடி தான் சென்றபோது சிலர் அவரது வீட்டில் தன்னைத் தாக்கியதாகவும், பலாத்காரமாக அவருக்குவேறு திருமணம் செய்ய அவர மறைத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த இளம்பெண் பரஞ்சோதி யாழ். பொலிஸ் அதிபருக்கு முறையிடு செய்துள்ளார்.

## மூதறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் நேற்று நண்பகல்வந்து நிலைமையை அறிந்துசென்றனர்.

அவசிய தேவை ஏற்பட்டால் மூளை நரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் காப்ரால் மீண்டும் அழைக்கப்படுவார் எனக்கூறப்பட்டது.

### ஊசி அகற்றப்பட்டது

நரம்புகள் மூலம் குளுக்கோஸ் ஏற்றுவதற்கு நரம்பில் குத்தப்பட்டிருந்த ஊசி நேற்று அகற்றப்பட்டுவிட்டது. நாசித்துவாரத்தின் ஊடாகவே குழாய்மூலம், நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டுவருகிறது.

நெஞ்சில் உள்ள சளி அகற்றப்பட்டதும்,வாயின்மூலமாக நீர்ப்பதார்த்தங்கள் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

மட்டுநகர் எம். பி. திரு. எஸ். இராசதுரை, பருத்தித்துறை எம். பி. திரு.கே.துரைரத்தினம் ஆகியோரும் நேற்று ஆஸ்பத்திரிக்கு வந்து நிலைமையை அறிந்து சென்றனர். (க-இ)

## பிரதேச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் தம்மைத்தாமே ஆள அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். இதற்கேற்ற முறையில் இன்றைய அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் இந்தவகையில் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதில் கச்சேரி முறையை ஒழித்து அமையவிருந்த மாவட்டசபைகள் தமிழ் மக்களது வட-கிழக்குப் பிரதேசங்களில் இணைந்தும் செயல்படலாம் என்ற கொள்கை ஏற்கப்பட்டிருந்தது. ஆகவே தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் தமது உட்பகைமைகளை மறந்து தேசத்தை நேசிக்கும்வகையில் இச்சுயாட்சிக் கொள்கையை ஏற்று, கச்சேரி அமைப்பு முறையை மாற்றி ஜனநாயகப்படுத்தி அதிகாரங்களைப் பரவலாக்க வழிசமைக்க வேண்டும்.

இதனால்தான் பிரச்னை திருமே தவிர, உரிமைகளை மறுப்பதோ அடிப்படை உரிமைகளை ஏற்கத் தயங்குவதோ பிரச்னைகளை மேலும் சிக்கலாக்கும். (ஆ)

புங்குடுதீவு, வெள்ளி

ஊரைதீவு, மடத்துவெளி, வரைதீவு ஆகிய இடங்களில் இயங்கும் மூன்று சிறுவர்பாடசாலைகளில் கல்விகற்கும் சிறுவர்களுக்குரிய அரிச்சுவடி மட்டைகளை ஊரைதீவுகிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் அன்பளிப்புச் செய்தார்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விலாது உயிர்களும் வாழக்கூடும்.

அரசினாலும், மற்ற மக்களாலும் செய்யமுடியாத பல சமூகப்பணிகளை, கோவில்களும் சிறப்பாக ஆதினங்களும் செய்ய அதிக வாய்ப்புண்டு. தமிழகத்திலே தமிழ் மன்னர்கள் ஆட்சிசெய்த காலத்தில் பல கோயில்களையும் துறவிகளைத் தலைவர்களாகக் கொண்ட ஆதினங்களிடமே ஒப்படைத்திருந்தனர். அதற்குத் தக்க காரணமும் உண்டு.

நல்லை ஆதீனம் ஒரு மேலான துறவியைத் தலைவராகக்கொண்டுள்ளதால் இந்நாட்டில் அவர்மூலம் வழிவழியாக சைவமும், அறங்களும் ஓங்க திருவருள் துணைசெய்யுமென்று நம்புவது மிகையல்ல.

# ஐம்பதினாயிரம் தமிழர்கள் பௌத்தத்தை தழுவினர்

ருகம, வெள்ளி

ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டதமிழர்கள் பௌத்த சமயத்தைத் தழுவிக்கொண்டனர் எனத் தமிழர் பௌத்த நிலைய தலைமைப்பீடத்தை சேர்ந்த வணபண்டித அக்குருலசுமண தீரதேரோ கூறினார்.

பௌத்த சபையின் சேவையினாலேயே தமிழர்கள் பௌத்தத்தை தழுவிக்கொண்டனரென்றும், கொழும்பு, யாழ்ப்பாணம்மற்றும்வடக்குக்கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சுமார் அரைலட்சம் தமிழர்கள் பௌத்தத்தைத் தழுவிக்கொண்டனர் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணப்பகுதியில்யாழ் நாகவிகாரை பிரதமகுரு வண பண்டித கடவத்த நந்தாராம நாயக்கதேரோவின் உதவியுடன் நடந்த பிரசாரத்தின் மூலம் 350 ஹரிஜன குடும்பத்தினர் பௌத்த சமயத்தைத் தழுவிக்கொண்டார்கள் என்றும் அவர் கூறினார். (க)

மாவிட்டபுரம், வெள்ளி

வலி வடக்கு உதவிஅரசாங்க அதிபராக இருந்து இடமாற்றம் பெற்றுள்ள திரு. ந. அமிர்தசாகரனுக்கு புதியஉதவி அரசாங்கஅதிபர் திரு. கே. மகாதேவா பொதுமக்கள் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திரு. அமிர்தசாகரன் வலி வடக்குப் பகுதிக்கு ஆற்றிய சேவைகளைக் கௌரவித்து வலி வடக்கு கிராமஅபிவிருத்தி சங்கங்களின் சமாசம் சனசமூக நிலையங்களின் சமாசம் பயிர்ச்செய்கைக் குழுக்கள், இணக்க சபைகள், இசை வேளாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடத்திய சேவை நலம் பாராட்டு விழாவிலேயே அவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன்பொதுமக்கள்சார்பில் பாராட்டுப்பத்திரமொன்றும் வாசித்தளிக்கப்பட்டது. (ஆ)

## எஸ். ஜே. வி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதைய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்றும் அப்பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது. (ம-இ)

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்களை நிறுத்த வேண்டும் என்ற கருத்துப் பற்றியும் இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (இ)

## கல்வி

(1-ம் பக்கத் தொடர்ச்சி

முத்திரைச் சந்தைக் கருகில் அமைந்துள்ள வடமாநிலக் கல்வித் திணைக்களத்திற்கு காலை 8-30 மணிக்கு இவர் விஜயம் செய்வார். (இ)

## காங்கேசன்துறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று மோதி உடைந்து பெரும் சேதத்திற்குள்ளானதையடுத்து இததுறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் செய்யமுடியாத நிலை ஏற்பட்டதால் கப்பல்கள் எதுவும் பலகாலமாக வரவில்லை.

நீண்டகால இடைவெளியின் பின் தற்போது 5700தொன் அரிசியுடன் பாங்கொக்கிலிருந்து ''கொண்விடன்ஸ்'' என்ற அரிசிக்கப்பல் ஒன்று தற்போது இத்துறைமுகத்திற்கு வந்துள்ளது. (ஆ)